ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

October - December 2011
கர வருட
ஐப்பசி - மார்கழி 2011
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



வைத்தியகலாநிதி இ. லம்போதரன் அவர்கள்

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

HOMELIFE HIGHER STANDARDS

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**






NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





HONEST AND FRIENDLY SERVICE
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**




உ
சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: *1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

கனடா மலர் 12:
இதழ் 3
கர வருடம்
ஐப்பசி - மார்கழி
திரு. ஆண்டு *-2041*
ஆங்கில ஆண்டு *2011*

**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம் பக்கம்


1. ஆசிரியர் தலையங்கம் 2
2. எங்குமுள்ள பிள்ளையார் 4
3. சைவசித்தாந்த ஆய்வில் இலங்கையில் முதலாவது.. 5
4. திருமுறையில் கீதாசாரம் 8
5. கருவறையில் தமிழோசை 10
6. திருத்தல யாத்திரை (தொடர்) 14
7. இந்து சமயப் பேரவைச் செய்திகள் 17
8. எங்குமுள்ள இந்து மதம் 21
9. நாவலர் பெருமானின் அமுத மொழிகள் 24
10 ஐந்தாங் குரவர் நாவலர் காட்டிய 26
11 ஆரோக்கிய வழி 28
12 ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள் 30
13. அமரர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 40
14. ஆத்மஜோதி இல்லத்தில் பிரதோச வழிபாடு 39
15. சாயி அவதாரமும் பயன்பாடும் 42
16. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை 47

# வைத்தியகலாநிதி இ. இலம்போதரன்

அறிவுத் துறைகள் பலவகை. தொழில் சார்ந்த அறிவைப் பெருக்குவதிலேயே மக்கள் பெருநாட்டம் கொள்கின்றனர். அது உலக இயல்பு. உலக வாழ்க்கைக்குத் தொழில் வேண்டும். தொழிலாற் பொருள் ஈட்டல் வேண்டும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.

வாழ்க்கை என்பது அத்துடன் நிறைவுபெறுவதில்லை. அதற்கு அப்பாலும் தமது நாடு, தமது இனம், தமது மொழி, தமது சமயம் என்ற உரிமையால் அவைபற்றி அறிவதிலும் ஆய்வுகள் நடத்துவதிலும் பெற்ற அறிவை மற்றவருக்கு எடுத்துரைப்பதிலும் ஒருசிலர் அதிக நேரம் செலவுசெய்கின்றனர்.

அத்தகைய ஒருவர்தாம் டாக்டர் இ. இலம்போதரன் அவர்கள்.

தொழிலுக்கு அப்பால் அவர் ஆற்றிவரும் பொதுப்பணிகள் அளப்பரியன. மருத்துவர் என்ற வகையில் மக்களின் உடல்நல வாழ்க்கைக்குக் கட்டுரைகள் வாயிலாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் தகுந்த ஆலோசனைகளை வழங்கிவருவதுடன் தாயகத்து மக்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்குவதற்குத் தானாகவும் பிறர்வாயிலாகவும் நிதியுதவியும் புரிந்துவருகின்றார்.

உடல்நலம் குறித்த கட்டுரைகளன்றி சைவசமய வளர்ச்சிக்கும் முன்மாதிரியான பல பணிகளைச் செய்து வருகின்றார். அவரது ஆகமங்களின் மீள் வருகை என்ற நூல் ஒரு நல்ல படைப்பு. சைவ சமயத்தின் சிறப்பு நூல்களாக விளங்கும் ஆகமங்கள் சமஸ்கிருதத்தில் உள்ளன. அவைபற்றிச் சுருக்கமான விளக்கத்தைத் தமிழில் டாக்டர் இலம்போதரன் அவர்கள் தந்துள்ளனர். பயனுள்ள ஆக்கம். சைவ மக்கள் படித்துத் தமது அறிவைச் செப்பஞ் செய்வதற்கேற்ற சிறந்த நூல்.

தமது சமயத்தின் தொன்மை, வரலாறு, பெருமை போன்றவற்றை அறியாதிருக்கின்ற சைவ மக்களின் அறிவை வளர்க்க அவர் எடுத்துவரும் முயற்சிகள் போற்றுதற்குரியன. ஞாயிற்றுக்கிழமைகளில் அவர் நடத்திவரும் சமய வகுப்புகளை

---

ஆலயத்தில் பலி இடுவது மன்னிக்க முடியாத பாவமாகும்.

ஆர்வமுள்ள பலர் நன்கு பயன்படுத்தி வருகிறார்கள். வகுப்புகள் சிறியவர்களுக்கு முதலிலும் அதன்பின் பெரியவர்களுக்குமாக இரு பிரிவுகளாக நடத்தப்பட்டு வருகின்றன.

இளஞ் சந்ததியினர்தாம் அவரது இலக்கு. அவர்களுக்காகவே பெரியவர்களுக்கும் வகுப்புகள் நடத்துகின்றார். பெரியவர்களின் சமய அறிவு வளர்ந்தாலே சிறுவர்களின் அறிவும் வளரும் என்பது அவரது நிலைப்பாடு. இளைஞருக்கு ஏற்ற வகையில் நவீன வசதிகளைப் பயன்படுத்தி விளங்காத தத்துவங்களையும் விளங்க வைக்கின்றார்.

அடுத்த தலைமுறையின் சமயாச்சாரியாருக்குத் தலைவணங்குகின்றோம்!

- வி. கந்தவனம்

---

## 2010 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

அமரர் வடிவேலு விவேகானந்தராசா, புன்னாலைக் கட்டுவன், வடக்கு, நினைவாக (2011) $300.00

அமரர் செல்லம்மா பரராசசிங்கம், புங்குடுதீவு, 6ஆம் வட்டாரம் நினைவாக (2011) $500.00

அமரர் இளையதம்பி ஆறுமுகம், உடுப்பிட்டி, இலக்கணாவத்தை நினைவாக (2011) $120.00

அமரர் க விமலன் (விசு), பண்டத்தரிப்பு நினைவாக (2011) $150.00

அமரர் சரவணைமுத்து ஞானசம்பந்தர், சாவகச்சேரி நினைவாக (2011) $100.00

சிவ முத்துலிங்கம் அவர்களின் மணி விழாவை முன்னிட்டு பேரவையின் திருக்கூட்டத்தினரும் அங்கத்தவர்கள் சிலரும் மனமுவந்தளித்த அன்பளிப்பு $745.00

**ஆத்மஜோதி பத்திரிகைக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416-724-6240**

# எங்குமுள்ள பிள்ளையார்

## அனலைதீவு – பெரியபுலம்
## மகாகணபதிப் பிள்ளையார்

ஓசையலை ஓவியங்கள் தவழ்ந்து கீறும்
ஓயாது தென்றலிசை உவந்து பாடும்
ஆசிரிய அறிஞர்பதி அனலை தீவில்
அறமோங்கும் பெரியபுலம் அமர்ந்து தொண்டர்
மாசுகளை நீக்கிமகிழ்ந் தாளும் மன்னர்
மகாகணப திப்பிள்ளை யாரை வாழ்த்தி
வாசமலர்த் தாளிணைகள் வணங்கு வார்க்கு
வருத்துநோய் துன்பங்கள் வாரா வாமே. (101)

## நெடுந்தீவு
## நடுக்குறிச்சிப் பிள்ளையார்

கனக்கின்ற வினையெல்லாங் கரைப்பாய் என்று
கலந்துன்றன் பழவடியார் களிக்கின் றார்கள்
எனக்கொன்றுந் தெரியாது தெரிந்த தெல்லாம்
எனக்குள்ளே இருக்கின்ற இறைவன் நீயே
மனக்கன்றுன் இனிக்கின்ற அருட்பால் மாந்தி
மகிழ்கின்ற வாழ்வல்லால் மற்றொன் றில்லை
நினைக்கின்ற அடியாரின் நெஞ்சுள் நிற்கும்
நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளை யாரே. (102)

## நெடுந்தீவு
## நெழுவினி விநாயகர்

ஆறுமுக மானவருக் கண்ணர் ஆவார்
ஆனைமுகங் கொண்டவொரு திண்ணர் ஆவார்
வீறுமிகு கயமுகனை வீழ்த்த வந்தார்
விண்ணுலகும் மண்ணுலகும் வாழ்த்த வந்தார்
நீறுபொலி நெற்றியடி யார்கள் வாழும்
நெடுந்தீவின் நெழுவினிலே நிலைகொண் டுள்ளார்
பாறிவிழப் பழவினைகள் பாடி மேன்மை
பணிந்தவரைப் பத்தியுடன் பரவு வாமே. (103)

# சைவசித்தாந்த ஆய்வில் இலங்கையில் முதலாவது முனைவர் (ஸ்ரீகலாநிதி) பட்டதாரி நந்தினி

மறவன்புலவு திரு. க. சச்சிதானந்தம்

சைவ நெறி = முழுமையை நோக்கிய உயிரின் கூர்தலுக்கான வழி.

முழுமை = உமை பங்கனான சிவன்

உயிர் = முழுமை அற்றது.



முழுமையை அடையத் தடையாக, தன்முனைப்பு, வினை, மாயை ஆகிய முக்கழிவுகள்.

இக் கருத்துரை, விளக்கவுரை, விரித்துரை யாவும் சைவ சித்தாந்தம்.

சைவ சித்தாந்தத்தைக் கற்றுத் துறைபோகிய புலத்துறை முற்றித் தெளிந்து தேறியோர் வாழும் நாடு ஈழநாடு.

இலங்கைப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் சைவ சித்தாந்தம் ஒரு பாடம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைமுதுவல் பட்டதாரி வகுப்புகளை இந்து நாகரிகத் துறையினர் நடத்தி வருகின்றனர்.

எனினும் சைவசித்தாந்தத்துள் ஆய்வு செய்து எவரும் கலாநிதிப் பட்டம் இதுவரை பெறவில்லை.

தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களில் சைவசித்தாந்த ஆய்வுக்கு முனைவர் (ஸ்ரீகலாநிதி) பட்டம் வழங்குவது வழமை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தத் துறை உண்டு. அங்கே முனைவர் பட்டத்துக்கு சைவசித்தாந்தத்துள் புகுந்து ஆய்ந்து பட்டம் பெறும் மாணவர் உளர்.

4.11.2011 காலை. சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபம். மேதகு தமிழக ஆளுநர் ரோசையா சென்னைப் பல்கலைக்கழக வேந்தராகத் தலைமை தாங்குகிறார். துணைவேந்தராக முனைவர் திருவாசகம் அங்கு இருக்கிறார்.

---

இன்பமும் துன்பமும் மனதில் இருந்து உண்டாகின்றன. எங்கே ஆசை இல்லையோ அங்கே கோபம் இல்லை.

இந்தியப் பல்கலைக் கழகங்களுக்குப் பொதுவான மானியக் குழுவின் தலைவர் முனைவர் வேதப் பிரகாசர் முதன்மை விருந்தினராக வந்திருக்கிறார். தமிழக அரசின் மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் பழநியப்பன் வந்திருக்கிறார். பதிவாளர், துறைத் தலைவர்கள் எனப் பேராசிரியர்கள் வரிசையாக மேடையை அலங்கரிக்கிறார்கள்.

4.11.2011 அன்று பட்டமளிப்பு விழா. விருந்தினர்களுள் ஒருவராக நானும் அங்கு இருந்தேன்.

பல்வேறு பட்ட வகுப்புகளில் முதன்மை வெற்றிகள், பதக்கங்கள், பரிசில்கள் பெற்றவர் மஞ்சள் அங்கிகளுடன் சிவப்புக் கரைச் சால்பட்டிகளுடன் வரிசையாக இருக்கின்றனர்.

முனைவர் பட்ட மாணவர்கள் வெள்ளை அங்கிகளுடன் சிவப்புக் கரைச் சால்பட்டிகளுடன் வரிசையாக இருக்கின்றனர். *அறிஞர் ஊர்வலம், தமிழ்த்தாய் வாழ்த்து, துணைவேந்தர் அறிக்கை,* அமைச்சர் உரை, முனைவர் வேதப்பிரகாசரின் பட்டமளிப்புவிழாப் பேருரை என நிகழ்ச்சி தொடர்கிறது.

பதக்கங்கள் பரிசுகள் பெற்றவர்கள் வரிசை முதலில். ஒவ்வொருவராக வந்து வேந்தரிடம் பட்டத்தையும் பரிசையும் பெற்றுச் செல்கின்றனர்.

அடுத்து முனைவர் பட்டம் பெற்றோர் வருகின்றனர். ஒவ்வொருவராகப் பெயரிட்டு அழைக்க 428 பேருக்கு வரிசையாகச் சான்றிதழ்களை வழங்குகிறார் வேந்தரான மேதகு ஆளுநர் ரோசையா.

செல்வி நந்தினி சண்முகலிங்கம் என்ற பெயரை அழைத்ததும் தெரிந்தவராயிற்றே, அவர்தானோ எனக் கூர்ந்து கவனிக்கிறேன். அவர்தான், அவரேதான். தலைப்பாகை மறைத்தாலும் அங்கிக்குள் புகுந்தாலும் நந்தினி நந்தினியல்லவா!

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. சண்முகலிங்கம் அவர்களின் மகள். சிறு வயது முதலாக எனக்குத் தெரிந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தத் துறையில் முனைவர் பட்ட ஆய்வு மாணவி என்பதை அறிந் திருந்தேன். ஆய்வேட்டைக் கொடுத்துப் பட்டமும் பெற்றுவிட்டார் என்பதை நேரில் கண்டதும் கண்கள் பனித்தன.

சைவப் பராம்பரியத்தில் திளைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர், இலங்கையில் சைவசித்தாந்தத்தில் ஆய்வு செய்து

---

குரோதம், பொறாமை உள்ளவனுக்கு அருட் செல்வம் இல்லை. உள்ளம் வசமானால் உலகம் வசமாகும்.

முனைவர் பட்டம் பெற்ற முதலாவது புலமையாளர் என்ற செய்தியால் பூரித்தேன்.

பட்டமளிப்பு விழா முடிந்து வெளியே வந்ததும் முதல் தொலைபேசி அழைப்பு யாழ்ப்பாணத்துக்கு. என் இனிய நண்பர் திரு. சண்முகலிங்கத்துக்கு. அறிவறிந்த மக்களைப் பெற்றதால், சான்றோர் வரிசையில் தன் மகளும் உலாவினள் என்பதால் ஈன்ற பொழுதில் பெரிதுவக்குமாறு செய்தி கூறினேன்.

முழுமையை நோக்கிய உயிரின் கூர்தலுக்கு வழிகாட்டும் புலமையாளருள் ஒருவராக, இலங்கையில் சைவசித்தாந்தத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது மாணவியான அவரை உள்ளம் உவந்து மனம் நிறைந்து, வியந்து பாராட்டி வாழ்த்தினேன்.

---

## 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| சண்முகநாதன் சரவணன் | $ 200.00 |
| மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| கனகசபை கந்தையா | $ 200.00 |
| வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| இராசலட்சுமி சண்முகலிங்கம் | $ 200.00 |
| இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |

---

## அருள்மொழிகள்

இரக்கமுள்ள சாதுக்கள் கடவுளின் பெரும் கருணையை பெறுகின்றனர்.

பொய்பேசுவோரை வறுமைப்பிணி வந்து வாட்டும். திருவருள் உண்டாகாது.

பொய்யுடையான் வாக்கால் உச்சரிக்கும் மந்திரங்களும் பலனை நல்காது.

# திருமுறையில் கீதாசாரம்

குருவடி பணிந்து தொகுத்தவர்
மருத்துவ கலாநிதி இ. லம்போதரன்

பேசு வாழி! பேசு வாழி!
ஆசையடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி! பேசு வாழி!
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்

நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன்று ஒருவழி நில்லா அன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறல் மிகுந்தோர்

கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையர் எங் குலத்தினர் இறந்தோர் ஏனையவர்
பேரும் நின்றில போலும் தேரின்
நீயும் அ∴து அறிதி.

- பட்டினத்தார் பாடிய கோயில் நான்மணி மாலை 11ம் திருமுறை

பேசு! பேசு! ஆசையுடன் மயங்கிக் குற்றம் செளிணியும் மனமே பேசு பேசு.

1. பேசு என்பது இன்றும் வழக்கில் உள்ள நல்ல யாழ்ப்பாணத் தமிழ்
2. பஜ கோவிந்தம் பாணியில் அமைந்த வரிகள்
3. பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூட மதே
   - கோவிந்தனைப் பாடு! கோவிந்தனைப் பாடு
   மூட மனமே! கோவிந்தனைப் பாடு.

---

சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும்.
ஆத்மஜோதியில் அருட்ஜோதி சூழ சிவசோதி விளங்கின்றது.
வழிபாட்டுக்கு அன்பும் ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

நாம் காண்பன ஒரு நிமிடத்தில் இல்லாமல் போகும்.
நாம் உண்பன எல்லாம் மலமாக வெளியேறும்.
நாம் பூசும் அழகு மற்றும் வாசனைத் திரவியங்களும் நேரம் சென்றதும் அழுக்காகும்.
ஒன்று சேர்ந்தவர்கள் பிரிவார்கள்.
இன்று நிறைந்திருப்பவை நாளை குறையும்.
இன்று உயர்ந்திருப்பவை நாளை பணியும்.
இன்று பிறந்திருப்பவை நாளை இறக்கும்.
இன்று பெரிதாக இருப்பன நாளை சிறுக்கும்.
ஒன்றுமே ஒருநிலையில் என்றும் நிலைத்திருப்பதில்லை அது மட்டுமல்ல -
செல்வத்தோடு பிறந்தவர்கள், பெருமையோடு திகழ்ந்தவர்கள்.
கல்வியிற் சிறந்தவர்கள் அருமையான திறமைகளைப் பெற்றவர்கள்.
கொடையில் சிறந்தவர்கள், படைவலிமையில் சிறந்தவர்கள்
குலத்தால் உயர்ந்தவர்கள், பல நன்மையான பண்புகளின் வழி ஒழுகுபவர்கள்
இது போன்ற பலர் எக்குலத்தில் தோன்றியவராயினும் யாவரும் ஒருநாள் இறப்பவர்களே!
அவர்களின் பெயர்கள் கூட கால ஓட்டத்தில் நில்லாது அழியும்.
நீயும் இதை உணர்ந்து தெளி.

---

## வாசகர்களுக்கு
## அன்பான வேண்டுகோள்

1948ஆம் ஆண்டு துறவற ஞானி ஆத்மஜோதியாராலும், இல்லற ஞானி ராமச்சந்திராவினாலும் ஆரம்பிக்கப் பெற்ற ஆத்மஜோதிச் சஞ்சிகை பல சிரமங்களுக்கு மத்தியில் கனடாவில் வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து வெளிவருவதற்கு ஆத்மஜோதி அன்பர்கள், ஆதரவாளர், வாசகர்களிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கின்றோம்.

ஆத்மீக நூல்களை வெளிவருவதற்கு உதவுவது ஞானதானமாகும். இவ் அரிய பணியில் பங்குபற்றி மேன்மை உறுவீர்களாக.

- ஆசிரியர்குழு

**தொடர்புகளுக்கு: 416-724-6240**

# கருவறையில் தமிழோசை

### பேரறிஞர் முருகவே பரமநாதன்

தமிழ் ஒரு மொழி. இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும் எனப் பல நிகண்டுகள் இலக்கணம் வகுக்கின்றன. நீர்மை ஒழுங்கான இயல்பு எனப் பொருள் கண்டுள்ளனர் மேதைகள். உலகமெலாம் தமிழோசை பரவ வேண்டும் என்றார் பாரதி. தாய்மொழி வாய்மொழியாகவேனும் இருக்கிறதா? விடை வாசகர்களின் வாக்கில் இருந்து வழியட்டும் இவ்வியாசத்தில் கருவறை மூன்று கருக்களைக் கொண்டது. ஒன்ற சினகரங்களின் மூலட்டானம். இரண்டு மாதா உதரம். மூன்று ஒவ்வொருவரின் உளக்கோயில். இங்கே கருவறையில் தமிழ் ஒலிக்கிறது என்ற பொருள் கொள்வீர்களாக. சைவம் இதற்குப் புறம்பு. கிறீத்தவ ஆலயங்களில் தமிழிலே ஆராதனை நடக்கிறது. சைவக்கருவூலம் சமஸ்கிருதக் கருவறையாயிற்று. ஆனால் காப்போருக்கே விளங்காத பாசை தமிழ் படி தாண்டாப் பத்தினி ஆனால் வைணவ ஆலயங்களில் தமிழ் முழங்குகிறது. இது பற்றிய கண்ணோட்டமே இக்கருவூலம்.

செம்மொழியாம் தமிழை வளர்ப்பதில், இணையற்ற இலக்கண இலக்கியங்களை வடிப்பதிற் தெம்மாங்கு சிந்துபாடுவதிற் சைவப்பெருங்குடியினர், சமணமதத்தினர், கிறீத்தவப் புலவர்கள், பாதிரிமார்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர் முன்னின்றுழைத் துள்ளனர் என்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. பெரியபுராணம், திருவாசகம் மொழிபெயர்க்கப்பட்டதும் கிறீத்தவர்களாலேதான் திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்ய வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டுமெனப் பாரதி பாட்டிசைத்தான். ஒப்பியல் நோக்கில் நம்முன்னேற்றம் தீவிரதரம் படவில்லை. மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதை நடத்துவோம். இந்த மூச்சும் பேச்சும் நமக்கு இனறு மிகமிக இன்றியமையாதது ஆம்.

சைவநெறியிலே இறைபுகழ்பாடுவதைப் பன்னிருதிருமுறை களாக வகுத்துப் போற்றி எம்மிடம் கையளித்தனர். நாம் போற்றக் கடமைப்பட்டவர்கள், தூற்றுபவர்கள் அல்ல. (தூற்றம் பெண்டிர் கூற்றெனத்தகும்-பாட்டி) சைவத் திருமுறைகளையும் தாண்டிப் பல

பக்திப்பனுவல்கள் எழுந்துள்ளன. இவ்வாறே, வைணவ சமயத்திலும் பன்னிரு ஆழ்வார்கள் தோன்றி வடித்த இன் தமிழ் முழுக்கமே திரு நாலாயிரம் என்று அழைக்கப்படும் திவ்வியப் பிரபந்தம். தொகையை மையமாய் வைத்து எழுந்ததே அத்திருநாமம். இவ்வண்ணமே பிள்ளைப் பெருமாளையங்கார் பாடியருளிய அஷ்டப் பிரபந்தம் (எட்டுஏடுகள்) வேதாந்த தேசிகர் அருளிய தேசிகப்பிரபந்தம் என்பனவும் பிரபல்யமானவை. சைவசமயத்தினர் இதில் ஈடுபடுவது குறைவு. ஆக இப்பிரபந்த நுட்பம் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

பன்னிரு ஆழ்வார்களும் பாடிய பிரபந்தங்களும்:

1. பொய்கை ஆழ்வார் - முதல் திருஅந்தாதி 100 பாசுரங்கள்
2. பூதத் தாழ்வார் - இரண்டாம் திரு அந்தாதி 100 பாசுரங்கள்
3. பேயாழ்வார் - மூன்றாம் திருஅந்தாதி - 100 பாசுரங்கள்
4. திருமழிசை ஆழ்வார் - திருச்சந்தவிருத்தம் - 120 பாசுரங்கள்
   நான்முகன்திரு அந்தாதி - 96 பாசுரங்கள்
5. மதுரகவியாழ்வார் - கண்ணிநுண்சிறுதாம்பு - 11 பாசுரங்கள்
6. நம்மாழ்வார் - திருவிருத்தம். - 100 பாசுரங்கள்
   திருஆசிரியம் - 7 பாசுரங்கள்
   பெரிய திருஅந்தாதி - 87 பாசுரங்கள்
   திருவாய் மொழி - 1102 பாசுரங்கள்
7. குலசேகரஆழ்வார் -பெருமான் திருமொழி - 145 பாசுரங்கள்
8. பெரியாழ்வார் -பெரியாழ்வார்திருமொழி- 473 பாசுரங்கள்
9. ஆண்டாள் பிராட்டி -திருப்பாவை - 30 பாசுரங்கள்
   நாச்சியார்திருமொழி - 143 பாசுரங்கள்
10. தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்
    திருப்பள்ளியெழுச்சி - 10 பாசுரங்கள்
    திருமாலை - 45 பாசுரங்கள்
11. திருப்பாணாழ்வார் - அமலன் ஆதிபிரான் - 10 பாசுரங்கள்
12. திருமங்கை ஆழ்வார்
    பெரியதிருமொழி
    திருக்குறுந்தாண்டகம்
    திருநெடுந்தாண்டகம்
    திருஎழுகூற்றிருக்கை
    பெரியதிருமடல்
    சிறிய திருமடல்

மொத்தம் 23 பிரபந்தங்கள் - 4039

இவர்களில் மதுரகவி நம்மாழ்வாரைக் குருவாகக் கொண்டவர். அவரின் பெருமைகளையே பாடினார். அவர் வெளிப்பாடுகள் மதுரபாவம் நிறைந்தவை. இவர் பெருமாளைப் பாசுரம் செய்யவில்லை. இப்பாவநிலையில் ஆண்டாள் பனுவல்கள் யாவும் பெரியாழ்வாரின் மகளாகத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு பாசுரம் செய்தவர். எனவே இவ்விருவரையும் விடுத்து ஆழ்வார்கள் பதின்மர் என்பர்.

இத்திருநாலாயிரத்துக்கு உரைகண்டோர் பலர். எல்லாம் மணிப்பிரவாள நடையே. இறையனார் அகப்பொருள்போல நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்குப் பன்னிரண்டாம் நூறாண்டில் இருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை உரைஎழுதப்பட்டிருக்கிறது. வருமாறு:

ஆறாயிரப்படி - திருக்குருகைப்பிரான் பிள்ளான் (பிள்ளை) ஆறாயிரம் கிரந்தமளவில் எழுதப்பட்டது

ஒன்பதினாயிரப்படி - நஞ்சீயர்
பன்னீராயிரப்படி - வாதிகேசரி - அழகிய மணவாளசியர்
இருபத்துநாலாயிரப்படி - பெரியவாச்சான்பிள்ளை
ஸ்ரீராமாயணம் இந்த அளவுடையது

முப்பத்து ஆறாயிரம்படி என்னும் ஈடு-வடக்குத் தெருவீதிப்பிள்ளை நாள்தோறும் கதாகாலாடஷேபத்தில் அருளியவற்றை வடக்கு தெருவீதிப்பிள்ளை பதிவு செய்தார். இவ்வண்ணம் பல உரைகள் எழுந்துளதாக வரலாறு. ஜீயர் அரும்பத உரையும் அவற்றுளொன்று.

பாசுரங்களின் தொகுப்பு நெறி. தேவாரத்தில் இருந்து வேறுபட்டது. சைவசமையத் தேவாரங்கள் 8-12 பாடல்வரை பதிகமாக்கப்பட்டது. பதியமே பதிகமானது. திருநாலாயிரமோ திருமுறையில் இருந்து சற்ற வித்தியாசமானது.

100 பாசுரங்களைக் கொண்ட தொகுப்பைப் பத்து எனவும் 10 பாசுரங்கள் கொண்ட பதிகத்தைத்திருவாய் மொழி எனவும் வழங்குவர். திருநாலாயிர ஏட்டைப் பார்த்து இவ்வமைப்பை அறிந்து கொள்ளலாம். இவ்வமைப்பு வரிசையில் முதற்பத்து என்பதற்கு முதல் நூறு பாசுரங்கள் என்றும் கொள்க. திருவாய் மொழி ஆயிரம் பாசுரங்கள் கொண்டது. இச்சீர்மையைக் கம்பர்தன் சடகோபர்

அந்தாதியில் அழகரும்பப் பாடுகிறார்.

சேராதன உளவோ பெரும் செல்வர்க்கு வேதம் செப்பும்
பேர்ஆயிரம் திண்பெரும்புயம் ஆயிரம் பெய்துளவத்
தார்முடி ஆயிரம் குருகூர்ச் சடகோபன் சொன்ன
ஆரா அமுதக்கவியோர் ஆயிரம் அவ் அரியிவைக்கே.

- பாடல் எண் 45

கண்ணன் குழலினும் இனிய பாசுரங்கள் இந்த ஆயிரத்திலொன்று நம்மாழ்வாரே பாடுகிறார். அவரின் அருளிச் செயல்களை நான்கு வேதமாகவும் மங்கைமன்னனின் 6 பிரபந்தங்களையும் ஆறங்கமாகவும் வைணவர் கொள்வர். மங்கையாழ்வாரின் மடல்கள் இரண்டும் வழமைக்கு மாறாகப் பெண்களே மடல் உளர்கிறார்கள். திருவெழு கூற்றிருக்கையும் திருநாலாயிரத்துக்குப் புதியவரத்து. இவ்வண்ணமே கோயில்திருமொழியென்ற அமைப்பை பின்னோர் கட்டுரையிற் பார்ப்போம். பாசுரங்களைத் துவக்கும்போதும் பூர்த்தியாகும் போதும் திருப்பல்லாண்டு ஓதுதல் பெருவழக்காகும். கோயில் திருமொழிகளும் இருமுறை பாராயணஞ் செய்ய வேண்டும். ஆண்டாளின் திருப்பாவை கிருஷ்ண தேவராயரால் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டது. திருப்பதியில் எம்பெருமான் முன் வேதங்களோடு திருப்பார்வையை ஓதிவழிபடும் நியமம் ஒன்று இருக்கிறது. திருப்பாவையை தெலுங்கு பேசுவோரும் தமிழ் பேசுவோரும் மிக்க ஈடுபாட்டோடு பாராயணஞ் செய்வர். ஆழ்வார்களின் குருபூசையின்போது அர்ச்சகர் முதல் அடியவர் வரை யாவருமே பக்திசிரத்தையோடு ஓதுவர். இதைக்கனடாவில் உள்ள றிச்மன்ட் ஆலயத்தில் நிதர்சனமாய்க் காணலாம். தீர்த்தம் கொடுக்கும்போதுகூட அர்ச்சகா ஆண்டாளின் திருப்பாவையை ஓதிக்கொண்டே இருப்பார். வைணவ ஆலயக்கருவறையில் தமிழோசை கேட்பதுபோல நம்சைவ ஆலயமூலட்டானத்திற் தேவாரதிருவாசகம் ஒலிப்பது எந்நாளோ.

மன்னும் மறைநான்கும் ஆனாணை, புல்லாணித்
தென்னனத்மிழை வடமொழியை, நாங்கூரில்
மன்னும் மணிமாடக் கோயில் மணாளன்.

பெரியதிருமடல் மங்கைமன்னன் 130.31.32

# திருத்தல யாத்திரை தொடர் - 4

திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம்

இந்துசமயப் பேரவைத் திருக்கூட்டத்தினர் நான்காவது தடவையாக 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இந்திய திருத்தல யாத்திரையை மேற்கொண்டனர். தொடர் கட்டுரையில் மூன்று பாகங்கள் ஏற்கனவே வெளிவந்துவிட்டன. நான்காவது பாகமாக இக்கட்டுரை வெளிவருகின்றது. ஐந்தாம் திருமுறையை பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான காஞ்சி மாநகரில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்தில் 17-12-2010 வெள்ளிக்கிழமை முற்றோதினோம்.

ஆறாம் திருமுறையை முற்றோதுவதற்குக் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவதிகை வீரட்டானத் தலத்திற்கு விரைந்தோம். அட்டவீரட்டானத்தலங்களில் ஒன்றான இத்தலத்தில் திரிபுரத்தை எரித்த வீரச் செயல் நிகழ்ந்தது எனக் கோயில் புராணமும் வரலாறும் கூறுகின்றன. அப்பர் சுவாமிகளின் சூலைநோயை நீக்கி அப்பர் பெருமானை சைவ உலகத்திற்கு தந்த புண்ணியத்தலம். தன் தவவலிமையாலும் வீரட்டானேஸ் வரரின் அருளினாலும் சமண சமயத்தில் மூழ்கியிருந்த மருள்நீக்கியாரை (அப்பர் சுவாமிகளை) சைவத்திற்கு மாற்றி அருளினார் திலகவதியார். அவர் வாழ்ந்து சரியைத்தொண்டு செய்த புண்ணியத்தலம். சமண சமயத்தைத் தழுவிச் சமணசமயம் சோழநாட்டில் பரவுவதற்கு உறுதுணையாக இருந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மனை சைவத்திற்கு மாற்றிய புனிதத் தலம். சைவ சமயத்திற்கு மாறிய அரசன் சமணப் பள்ளிகளை இடித்து அக்கற்களைக் கொண்டு குணபுரவீச்சரம் என்ற சிவன்ஆலயத்தைக் கட்டுவதற்கு மூலகாரணமாக இருந்தது இத்தலமாகும்.

8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்திநாயனார் அப்பர் பெருமான் உழவாரப்பணி செய்த திருவதிகையை மிதிக்க அஞ்சி சித்த வடமடத்தில் தங்கியிருந்தபொழுது திருவடி தீட்சை பெற்ற பெருமைக்குரிய தலம். திருஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனம் ஆடிக்காட்டிய தலம். சைவசித்தாந்த நூல்களில் ஒன்றான உண்மை விளக்கம் நூலை இயற்றிய மனவாசகம் கடந்தாரின் அவதாரத் தலம். தேவாரமுதலிகள் மூவராலும்

பாடல்பெற்ற தலம். இத் தலத்தில் அப்பர் சுவாமிகள் நான்காம் திருமுறையில் ஒன்பது பதிகங்களும் ஐந்தாம் திருமுறைகளில் இரண்டு பதிகங்களும் ஆறாம் திருமுறையில் நான்கு பதிகங்களும் பாடியுள்ளார். அப்பர் சுவாமிகள் பாடிய திருவடித் திருத்தாண்டகமும் திருவதிகைப் போற்றித் திருத்தாண்டகமும் திருமுறை ஆர்வலர்கள் மனனம் செய்ய வேண்டிய பாடல்களாகும்.

மிகப்பெரிய ஆலயம். பல அற்புதமான சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த தலம். ஆலய கருவறையின் நிழல் பூமியில் சாயாதபடி கட்டப்பட்டுள்ளது. சித்திரைச் சதயம் அப்பர் பெருமானின் குருபூசை நன்னாள். அந்நாளைத் தொடர்ந்து அப்பர் பெருமானின் விழா 10 நாட்கள் நடைபெறுகின்றது. அப்பர் பெருமானுக்கு தனிச் சந்நிதியும் உண்டு. சமணர்கள் பட்டத்துயானையை ஏவி அப்பர் பெருமானை கொல்ல முயன்றபொழுது சுண்ண வெண்சந்தணச் சாந்தும் என்ற பதிகத்தைப் பாடிக் கொல்ல வந்த யானையை வணங்க வைத்தார். அந்தப்பதிகத்தில் ஒவவொரு பாடலும் அஞ்சுவயாதொன்று மில்லை அஞ்சவருவதும் மில்லை என்று முடிவடைகின்றது. இறைவனைத் தஞ்சம் என்று சரணாகதி அடைந்தவர்கள் அஞ்சத் தேவையில்லை என்று இப்பதிகம் பறைசாற்றுகின்றது.

சிதம்பரநடராசப் பெருமானின் சிவதாண்டவச் சிறப்பை திருமுறை பாடிய நாயனார்கள் பலர் சிறப்பித்துப் பாடியுள் ளார்கள். சம்பந்தப் பெருமானுக்கு திருநடனத்தை ஆடிக்காட்டிய திருவதிகை நாதரை வியந்து பாடிய சம்பந்தரின் பாடல் இது.

**எண்ணார் எழில் எய்தான் இறைவன் அனல் ஏந்தி**
**மண்ணார் முழவதிர முதிராமதிசூடிப்**
**பண்ணார் மன்ற பாடப்பரமன் அதிகையுள்**
**விண்ணோர் பரவ நின்றாடும் வீரட்டானத்தே.**

18-12-2010 சனிக்கிழமை திருவதிகையில் ஆறாம் திருமுறையின் ஒரு பகுதியை ஓதிய பின் ஆறாம் திருமுறை மிகுதியை ஓதுவதற்காக மறுநாள் 19-12-2010 ஞாயிற்றுக்கிழமை திருக்கழிப்பாலை தலத்திற்கு விரைந்தோம்.

திருக்கழிப்பாலை சோழநாட்டு வடகரைத்தலம் என்று

அழைக்கப்படுகின்றது. இத்தலம் திருநெல்வாயிலுக்கு சிவபுரிக்கு மிகவும் அருகாமையில் அரை கி.மீற்றர் தூரத்தில் உள்ளது. சிறிய கோயில் சுற்றுமதில்சுவர்கள் சேதமடைந்துள்ளது. கொடி மரம் ஏதும் இல்லை. மகோற்சவம் இவ்ஆலயத்தில் இல்லை. ஆனால் ஐந்துசாமப்பூசை நடைபெறுகின்றது. தேவார முதலிகள் மூவராலும் பாடல்பெற்ற தலம் நவராத்திரி சிவராத்திரி, விநாயகசதுர்த்தி போன்ற விசேட உற்சவங்கள் மட்டும் நடைபெறுகின்றன. பாடல்பெற்ற தலமாக இருந்தும் ஒதுக்குப் புறமாக உள்ளது. கூடுதலாக கிராம மக்களாலே வழிபடப் படுகின்றது.

தலத்தின் பெருமையை உணர்த்துவதற்காக சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தில் பாடிய பாடல் ஒன்று பின்வருமாறு:

**எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால்**
**அங்கேவந்து என்னோடும் உடனாகி நின்றருளி**
**இங்கே என் வினையை அறுத்திட்டு எனையாளுங்**
**கங்காநாயகனே கழிப்பாலை மேயவனே.**

எங்கேயிருந்து உன் அடியவனாகிய நான் உன்னை நினைந்தாலும் அங்கே வந்து என் உட்கலந்து என்னோடு உடனாகி அந்த இடத்திலே என் வினையை போக்கி என்னை ஆளும் கங்கா நாயகனே கழிப்பாலை மேயவனே என்று வேண்டுகின்றார்.

பாடல் பெற்ற தலங்கள் 275 அவைகளில் 267 தலங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. பல தலங்கள் கிராமப்புறங்களில் பின்தள்ளப்ட்ட கிராமங்களில் உள்ளன. வாகனங்களில் பிரயாணம் செய்வதற்குச் சிரமமான ஆலயங்களும் உண்டு. விளக்குவைப்பதற்கு எண்ணெய் வசதி கூட இல்லாத பாடல் பெற்ற தலங்களும் உண்டு. நித்திய பூசைக்கு வசதியற்ற தலங்களும் அருளாளர்களால் பாடல்பெற்ற திருமுறைத்தலங் களில் உண்டு.

ஆறாம் திருமுறையை திருக்கழிப்பாலையில் முற்றோதிய பின்னர் ஏழாம் திருமுறையை ஓதுவதற்காக மறுநாள் திருநனிப்பள்ளி தலத்திற்கு விரைந்தோம்.

- தொடரும்

# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

## நவராத்திரி வழிபாடு



27-09-2011 தொடக்கம் 06-10-2011 வரை நவராத்திரி காலங்களில் பேரவையின் திருக்கூட்டத்தினரால் மாலை 4 மணி தொடக்கம் ஏழு மணி வரை பக்தி மயமாக ஆத்மஜோதி இல்லத்தில் வழிபாடு நடத்தப்பெற்றது. தினமும் அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, துர்க்கை அம்மன் பாடல்கள், திருமுறைப்பாடல்கள் ஓதிப் பூசைவழிபாடு செய்யப்பட்டது. தினமும் நைவேத்தியம் வைத்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பெற்றது.

## நடேசர் அபிசேகத்தை முன்னிட்டுத் திருவாசகம் முற்றோதல்



10-10-2011 திங்கட்கிழமை நடேசர் அபிசேகத்தை முன்னிட்டு திருவாசகம் முற்றோதல் காலை 8:30 மணிதொடக்கம் 4:30 மணிவரை நடைபெற்றது. நண்பகல் 12 மணிக்கு ஆத்மஜோதி இல்லத்தில் இருந்து அருள்பாலிக்கும் நடராசப் பெருமானுக்கு அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று மதிய போசனமும் வழங்கப் பெற்றது.

## பிரதோஷ வழிபாடு



பிரதிப் பிரதோஷ விரத காலங்களில் திருவாசகம் முற்றோதி சிவபூசை செய்து வழிபாடு நடத்தப்படுகின்றது. பல வருடங்களாகப் பேரவையின் திருக்கூட்டத்தினர் இதிற் பக்திபூர்வமாக கலந்துகொண்டு வருவது குறிப்பிடத் தக்கது.

## திருமந்திர தொடர் சொற்பொழிவு



பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களால் திருமந்திரத் தொடர் சொற்பொழிவு வெள்ளிக்கிழமைகளில் வாரந்தோறும் மாலை ஆத்மஜோதி இல்லத்தில் நடைபெறுகின்றது.

அன்றையதினம் திருக்கூட்டத்தினரால் திருமுறை வழிபாடு தொடர்ந்து நடத்தப்படுகின்றது. பங்குபற்ற விரும்பும் ஆர்வலர்கள் 416 724 6240 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். நிகழ்ச்சிகள் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

## சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகளின் குருபூசை



26-10-2011 வியாழக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் சிவயோகசுவாமிகளின் சீடரான காவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் குருபூசை மிகவும் சிறப்பாக திருக்கூட்டத்தினரால் நடத்தப்பெற்றது.

## கந்தசஷ்டி வழிபாடு



கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு விரத காலத்தில் 27-10-2011 தொடக்கம் 01-11-2011 வரை காலையில் இருந்து மாலை வரை திருக் கூட்டத்தினரால் வழிபாடு செய்யப்பெற்றது. தினமும் கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம் திருமுருகாற்றுப் படை, சண்முககவசம் கந்தசஷ்டி கவ்சம் (ஆறுபடை வீட்டுகவசங்களும்) தெரிந்தெடுத்த திருப்புகழ் ஆகியன பாராயணம் செய்யப்பெற்றன.

## திருமுறைச் செல்வர்
## சிவ முத்துலிங்கத்தின் மணி விழா

இந்து சமயப் பேரவைச் செயலாளர் சிவ முத்துலிங்கம் அவர்களின் 60ஆவது வயது மணிவிழாவை பேரவையின் திருக்கூட்டத்தினரும் நிர்வாகிகமும் மிகவும் சிறப்பாக 22-11-2011 செவ்வாய்க்கிழமை ஆத்மஜோதி இல்லத்தில் கொண்டாடினர்.

பேரவையின் தலைவர் சைவ துரந்தரர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் பலர் உரையாற்றினர். பிறந்த நாள் வாழ்த்து மடல் ஒன்றும் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. பேரவையின் பொருளாளர் ஆசிரியர் சோமசுந்தரமும் மற்றும் அன்பர்களும் விழா நாயகருக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்கள்.

60வது பிறந்தநாள் பிரதோஷ நன்னாளில் நடைபெற்றது சிறப்புக்குரிய நிகழ்வாகும்.





மணிவிழா படங்களில் சில





மணிவிழா படங்களில் சில

# என்றுமுள்ள இந்து மதம்

குமார் புனிதவேல்

சென்ற இதழ் தொடர்ச்சி

"ஒரே பரமாத்மாவே தயவுசெய்து எனக்கு உதவுங்கள்" என்றார். அதற்குச் சிவபெருமான் "சகோதரி! நாம் இருவரும் ஒருவரே என்று எப்படிக் கூறுவாய். உனக்கு யார் சொன்னது?" என்ற கேட்டார். அதற்கு மகாலக்சுமியார் "மகாவிஷ்ணுவே எனக்குச் சொன்னார். அவர் ஆழ்ந்த தியானத்திலிருப்பதை கண்டு நான் "தேவாதிதேவா! உம்மிலும் உயர்ந்தவர் உளரோ? நீர் யார் குறித்துத் தியானத்திலுள்ளீர்" எனக்குக் கெட்ட வேளை அவர் "நான் சங்கர தியானம் செய்கிறேன். அவரே ஈஸ்வரன். அவரும் நானும் ஒன்றே. கற்றவர் யாவரும் இதை அறிவார். எனது அடியவராய் இருந்தாலும் அவர் ஈஸ்வரனை தூஷித்தால் நரகத்தில் இடர்படுவார்" என்று கூறினார் எனறு மகாலக்சுமி பதில் அளித்தார்.

மேலும் தாருகாவனத்தில் முனிவர்களுக்கு அருள்செய்யச் சிவபெருமான் சென்றவேளை அவருடன் மகாவிஷ்ணு மோகினி வடிவம் கொண்டு சென்றார். அதேவேளை பெரும் சிவபக்தனான இராவணனை அழிப்பதற்கு சிவன் விரும்பியவேளை மகவிஷ்ணுவின் உதவியை நாடித் தசரத இராமராக அவதாரம் எடுக்க வைத்தார். அந்த அவதார இராமர் பூஜை செய்து வணங்கியது சிவனாரையே.

இராமராக வந்த மகாவிஷ்ணுவுக்கும் சிவபெருமானின் அம்சமான அனுமானுக்கும் உ ள்ள ஒற்றுமை வியப்பூட்டுவதாகும். அவை

1. கடலைக் கட்டுப்பாட்டில் வைத்து பெரும்படையுடன் இலங்காபுரிக்கு இராமர் வந்தார். அனுமானோ ஒரே பாய்ச்சலில் அக்கடலைக் கடந்தார்.

2. அகோரமான யுத்தத்தில் இராமர் இராவணனை கொன்றார். அனுமான் பலமடங்கு வல்லமை கொண்ட இராவண:னை வதம் செய்தார்.

3. கிருஷ்ணர்கோவிந்த கிரியை ஒரு விரலில் தூக்கிப்பிடித்து கோபங்களை காத்தருளினார். அனுமரோ சஞ்சீவி பர்வதம் எனும் மலையையே தூக்கி வந்து லஷ்மணன் உயிரைக் காத்தார்.

4. இராமர் கால்பட்டு கல் கனிந்து அகலிகை உயிர்பெற்றார். அனுமான் இசைத்த காந்தர்வ கானத்தில் பாறையும் கரைந்தது.

மேலும் மகாவிஷ்ணு ஆயிரம் மலர்களைக் கொண்டு சிவனைத் துதிக்க அதில் ஒரு மலர் குறைந்தது. உடனே

த்யக்கமின்றி தன் கண்ணைப் பறித்து பூஜையை பூர்த்தி செய்ததால் கண்ணன் என்ற பெயரும் பெற்று, மிகமிகச் சக்திவாய்ந்த சுதர்சனம் என்ற சக்கராயுதத்தையும் பெற்றார். மேலும் ஈஸ்வரனை அவமதித்து நடத்தப்பட்ட தக்சன் யாகத்தில் மகாவிஷ்ணு கலந்துகொள்ளவில்லை.

எனவே எக்கோணத்தில் பார்த்தாலும் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பகையில்லை. ஏன் அடியார்கள் பகைக்கிறார் களோ புரியவில்லை. அக மதங்கள் ஆறும் மூன்று அடிப்படைக் கொள்கையில் ஒன்றுபட்டுள்ளன. முதலாவது இறை நம்பிக் கையை முற்றாக ஏற்றுக் கொண்டனவாகும். புறமதங்களான புத்தம், சமணம் போன்றவை இறையுண்மையை ஏற்பது இல்லை என்பதனை இங்கு ஞாபகப்படுத்துவது அவசியம். அடுத்ததாக கர்மம், தர்மம் எனும் கோட்பாட்டை முற்றாக ஏற்றுக் கொண்டுள்ளன. அதாவது கர்மம் என்பது முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற வாக்கிற்கு அமைய நாம் செய்யும் செயற்பாடுகள் தாம் எமது வாழ்வை நிர்ணயிக்கின்றன. சங்கப்புலவர் பூங்குன்றனாரே இதை அழகாக "தீதும் நன்றும் பிறர் தரவாரா!" என்ற கூறிச் சென்றுள்ளார். தர்மம் என்பது சரிபிழை என வகுத்துச் செயற்பாடுகளை செயற்படுத்துவது இன்னார்க்கு இதுதான் கடன் என்பதை சுயதர்மமாக வகுப்பதுமாகும். மூன்றாவது முக்கிய கோட்பாடு மறுபிறப்பு என்பது. மேற்குலகத்தில் தோன்றிய மதங்கள் இறப்பின் பின் இறைவனிடம் செல்லத் தீர்ப்பு வழங்குவதாக தெரிவிப்பர். ஆனால் இந்த ஆறு அக மதங்களும் மறுபிறப்பில் நம்பிக்கை வைப்பதுடன் முற்பிறப்பின் செயற்படி மறுபிறப்பு அமையும் என்று இறுதியாக இவ்வாறு மதங்களும் வேதங்களின் உண்மைத்துவத்தை நம்பகத்தன்மையை ஏற்றுக் கொண்டுள்ளன. சிவஞான போதத்தைப்பற்றி குறிப்பிட்டுள்ள ஒரு ஞானியின் செய்யுள் இதை விளக்கும்.

**வேதம் பர் அதன் பால் மெய் யாகமம் நால்வர்**
**ஓதும் தமிழ் அதன் உள்ளுறு நெய் – போதமிகு**
**நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான்**
**செய்த தமிழ் நூலின் திறம்**

மேற்படிச் செய்யுளிலிருந்து சைவசித்தாந்தத்தின் அஸ்திவாரம் வேதம் என்பது புரியும். இக்கட்டுரையை

பூர்த்திசெய்யமுன் நான் சிறுவயதில் அம்புலிமாமா" என்ற சஞ்சிகையில் வாசித்த ஒரு சிறுகதையை பகிர்ந்து கொள்கின்றேன்.

ஒரு வயோதிபருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் எல்லாவிதத்திலும் நல்லவராயும் வல்லவராயும் இருந்தார்கள். ஆனால் வயோதிபருக்கு ஒரு குறை. அவர்கள் தங்களுக்குள் சதா சண்டைபோட்ட வண்ணமிருந்தார்கள். அவருக்கு மரணம் நெருங்கிவிட்டது என்று தெரிந்தது. தனது மகன்மார்கள் ஐவரையும் அழைத்தார். அவர்கள் ஒவ்வொருவரையும் வேலியிலிருந்து பெருவிரல் சுற்றளவில் இரண்டு முழம் நீளமுள்ள ஒவ்வொரு தடி வெட்டி வரும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் கொண்டுவந்த தடியை ஒன்றாக இணைத்துக் கட்டிவிட்டு, அந்த கட்டை மூத்த மகனிடம் கொடுத்து உடைக்கும்படி சொன்னார். மூத்தவன் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. அடுத்து இரண்டாவது மகனிடம் கொடுத்தார். அவனாலும் முடியவில்லை. இப்படியாக ஐந்து மகன்களும் ஒவ்வொருவராக முயன்றும் முடியவில்லை. உடனே சாகும்தறுவாயில் இருந்த தந்தை கட்டை அவிழ்த்து ஒவ்வொரு வரிடமும் ஒரு தடியைக் கொடுத்து முறிக்கும்படி சொன்னார். மிக எளிதாக உடைத்துவிட்டாகள். உடனே தந்தையார் தன்பிள்ளைகளை பார்த்து "பிள்ளைகளே இந்தத் தடிகளைப் போல் நீங்கள் அனைவரும் இணைந்து ஒற்றமையாய் இருந்தால் ஒருவரும் உங்களை வெற்றி கொள்ள முடியாது அல்லாமல் உங்களுக்கிடையில் சண்டை பிடித்துக் கொள்வதால் உங்கள் ஒவ்வொருவரையும் மிக எளிதாக அழித்து விடுவார்கள்" என்று சொன்னார்.

ஆறு வெவ்வேறு தெய்வங்களை இஷ்டதெய்வங்களாக, முழுமுதல் தெய்வமாக கொண்டாடும் நாம் ஒற்றுமையாக இந்து என்ற குடைக்குக்கீழ் ஒதுங்கி இருக்கும்வரை ஒருவரும் எம்மை அழிக்க முடியாது. அவரவர் விரும்பிய இஷ்டதெய்வத்தை கும்பிடட்டும், அதில் தவறு ஏதுமில்லை. எமது மக்கள் பிரிந்து உயர்ச்சி தாழ்ச்சி சொன்னால் மற்ற மதங்கள் எம்மை அழித்துவிடுவதுடன் எமது குழந்தைகளும் காலப்போக்கில் மாறிவிடுவார்கள். எனவே ஒன்றுபட்டு இந்து தர்மப்படி கர்மம் செய்வோம். வாழி என்றுமுள்ள இந்து மதம்!

சைவத்தின் காவலரின் 132ஆவது குருபூசையை முன்னிட்டு சிறப்பிதழ்

# நாவலர் பெருமானின் அமுத மொழிகள்

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும் முற்றறிவுடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார் ' பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!

அறிவும் அதனாலாகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுவதற்கு யோக்கியனாய் இரு.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும்' நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல் கூடும்' நல்லொழுக்கத்தையே அப்படி இழத்தல் கூடாது.

நீ பிறருக்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன் அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்து கொள்.

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பித்துக்கொள்ள மாட்டோமே.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாதபொழுது செல்வராவார் ஒருவரும் இலர்: அது உள்ளபொழுது வறியராவர் மிக அரியர். நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப்

பச்சாத்தாபப்படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி; அவைகளைப் பொறுத்துக்கொள்வார்கள்.

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

தரித்திரனாய் இருக்கும்போது திருப்தியடையாதவன் செலவனானபோதும் திருப்தியடையான். திருப்தியடையாமை மனக்குற்றமே அன்றிப் பொருட்குற்றம் அன்று.

உன்னால் உன் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபகாரமே அதுகண்ட உன்பிள்ளைகளால், உனக்குக் கிடைக்கும்.

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாவம் செய்பவர்களும் இலர் ஆதலால் பாவம் செய்பவர்களினும் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும்பாவிகள்.

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் மூவகையோரிடத்தும் தருமத்தின் வழுவாமல், ஒப்பநிற்றல் நடுவுநிலைமை எனப்படும், சரீரவருத்தத்திற்கு அஞ்சிப் பிறதொழில்களைச் செய்து பொருள்பெற்றும் உணவின் பொருட்டு வேளாளரிடத்துச் செல்ல வேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும் வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை.

செல்வம் முதலியவற்றினாலே செருக்கடைந்து முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்துவிடாதே.

பிறர் பொருளானது உடல் உயிர் இரண்டிற்கும் ஊறுசெய்தலால் உடல் ஒன்றிற்கே ஊறுசெய்யும் விஷத்திலும் கொடிதாம்.

கல்வியறிவு ஒழுக்கங்களாலும் ஈசுவர பக்தியினாலும் சிறந்துவிளங்கும் போதகர்களைக் கொண்டு, தேவாலயங்களிலும், புண்ணிய தீர்த்தக் கரைகளிலும், மடங்களிலும் சனங்களுக்குச் சமையத்தைப் போதிப்பித்தல் வேண்டும். இதுவே எல்லாத் தருமங்களினும் மேலாகிய தருமம்.

# ஐந்தாங் குரவர்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

**கல்வியின் வரம்பு கண்டோன் கடவுண்மாக் கலைகளெல்லாம்**
**வல்லவன் பிரமசாரி வானெனத் தமிழ் பொழிந்து**
**செல்வமுந் திருவு மோங்கச் சிவநெறி செழிக்க வந்தோன்**
**நல்லவர் போற்று நல்லூர் நாவலன் வாழ்க மாதோ.**

சென்ற நூற்றாண்டு பல பெரியாரைக் கண்டது. அவருள் சமயதீபமாக விளங்கியோர் இருவர். வடக்கே தயானந்தர் (1824-1883) தெற்கே நாவலர் (1822-1879) இருவரும் வந்திராவிடில், வேதாமங்கள் வேருடன் மறைந்திருக்கும். தயானந்தர் தூய வேத நெறியை விளக்கினார்; நாவலர் தூய சைவ நெறியைத் துலக்கினார். இருவரும் பிரமச்சாரிகள்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்கள்; காலத்தையும் ஞாலத்தையும் அறிந்து சிறந்தவர்கள்; உரமான பேச்சாளர்; அஞ்சா நெஞ்சுரங்கொண்டு போலியொழுக்கங்களை உள்ளும் புறமும் கண்டித்தவர்கள். தயானந்தர் சத்தியார்த்தப் பிரகாசம் எழுதினார்; வேதத்திற்கு முன்னுரை தீட்டினார். நாவலர் அரிய, பெரிய பலநூல்களை யாத்தளித்தார்; வேதவியாசர்போலப் பழஞ்செல்வங்களைத் தொகுத்தளித்தார். தயானந்தர் வேதக் கலைபரவ, ஆரிய சமாஜம் கண்டார். நாவலர் சைவசமாஜம் கண்டார்.

ஆறுமுகநாவலர் செய்த சிவபுண்ணியம் ஒப்புயர்வற்றதாகும். அவர் வேதத்தையும் ஆதரித்தார்; ஆகமத்தையும் போற்றினார். அரு, உரு, குரு, ஆகிய மூன்று தெய்வ விளக்கத்தையும் மதித்தார். சிவாகமத்திற்கு மாறானதைக் கண்டித்தார்; முதன்மையாக அக்காலம் படர்ந்துவந்த போலிக் கிறிஸ்துவத்தையே அவர் தக்க ஆதாரங்காட்டி மறுத்தார். அவர் காட்டும் ஆதாரங்களை எதிரிகளும் மறுக்க முடியாது.

நாவலர் பேச்சுடன் நிற்கவில்லை; செயலிலும் முனைந்தார். ஏராளமான கருவிநூல்களையும் சமய நூல்களையும் தாமே அச்சிட்டு வெளியிட்டார். பல பாடசாலைகள் கண்டு மாணவருக்குக்

---

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களைத் துணையாகக் கொண்டு ஒழுகு.

கல்வியளித்தார். நமது சமயத்தையும் புராணங்களையும் தூற்றிக்கேலி செய்தவர் வாயை அடக்கினார். ‘அஞ்ஞானிகள், சாம்பலாண்டிகள் பேயை வணங்குவோர் கல்லைக் கட்டி அழுவோர்’ என்று இந்தியரைத் தூற்றிய பாதிரிமாருக்குச் சரியான பாடம் கற்பித்தார். அன்னிய மோகத்தால் பிரமதம் புகுந்த நம்மவரைச் சிவநெறி தழுவச் செய்தார் தயானந்தர் சுத்தி சங்கடன் இயக்கம் தொடங்குமுன்பே நாவலர் இங்கே சைவசமாஜம் கூட்டி நம்மவரை ஒன்றுசேர்த்தார். திருமுறை நூல்களுக்குப் புத்துயிர் தந்தார். வேதாகமச் சைவத்தின் பெருமையை மாந்தர் மனதிற் பதியச் செய்தார். அவர் சொல்லினிமையே பலரைச் சைவராக்கியது.

நாவலர் தமிழருக்கும் தமிழகத்துக்கும் செய்த தொண்டு அளப்பரிது. இனிய உரைநடை வகுத்த புலவர் அவரே. அவர் உள்ளம் “தமிழ் சைவம்” என்றே துடித்தது. அவர் பணத்தை மதிக்கவில்லை; செல்வச் செருக்கைக் கெஞ்சவில்லை; பட்டம் பதவிகளை வேண்டவில்லை, அவர் தலைநிமிர்ந்து நடந்தார் சிவத்தையே மதித்தார்; உண்மையை உண்மை என்றார்; பொய்யைப் பொய்யென்றார்; தமிழின் பெருமையை நிலைநாட்டினார். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் வந்திராவிட்டால் சைவசமயமே மறைந்திருக்கும்; அவர்களுக்குப் பின்வந்து சைவ சமயத்தைக் காத்தவர் நமது நாவலர் பெருமானே.

ஆறுமுகநாவலர் என்பது போதாது, அவர் நாவன்மை படைத்தவர் மட்டுமல்லர். அவரை ஆறுமுகநாயனார் என்று அழைப்பதே தகும். முன்வந்த நான்கு சமயகுரவருக்குப் பிறகு இவரை ஐந்தாங்குரவர் என்பதே பொருந்தும். அக்காலம் ஒரு சர்வமதசங்கம் கூடியிருந்தால் சைவத்திற்குப் பிரதிநிதியாக நாவலரையே நாம் அனுப்பியிருப்போம். விவேகானந்தர்போல நாவீறுபடைத்த அருட்பெரியார் நாவலர். அவருக்கு முன்னும் ஒரு நாவலரில்லை பின்னும் இல்லை உலக மகான்களில் அவர் ஒருவர். அவர் ஊட்டிய உணர்ச்சி இன்னும் உள்ளத்திற்குள்ளம் சுழன்று பரவுகின்றது. அவர் நாட்டிய நிலையங்கள் ஒன்றுபலவாகி அரியபதி புண்ணியம் செய்துவரு கின்றன. அவர் அடிச்சுவடுகள் இன்னும் அழியாதிருக்கின்றன. அவற்றைப் பின்பற்றுவோம்.

---

மனத்தில் எழும் மாசினை அகற்றுதலே அறங்களில் எல்லாம் பெரிய அறமாகும்.

# நாவலர் காட்டிய ஆரோக்கிய வழி

ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாள்

ஆத்மீகத்திற்கு அடிப்படையாயிருந்து துணை செய்வது உடம்பு. உடம்பை உபாயமாய் வளர்த்து உயிரை உயர்நிலைக்குக் கொண்டுவர இலகுவான முறைகளைக் காட்டித் தந்தவர் நாவலரே. அவர் உலகிற்கு எவை அத்தியாவசியமோ அவை மூலம் ஆத்ம பரிபூரணத்தை அடையும் மார்க்கத்தைச் சொல்லித்தந்தார்; எழுதிவைத்தார்; செய்கையிற் காட்டினார்.

ஆசாரமே அவரின் அடிப்படையான முதற்படி. அதன்வழி போவதுதான் சுலபம் என்று கண்டார்; திடங்கொண்டார். ஆசாரவிதி என்ற சிறு புத்தகத்தைச் சுறுசுறுப்பாய் வெளியிட்டார். உடம்பின் புனிதமே மனத்தின் மாசை அகற்றும். மனமாசகன்றால் அறிவுவிரியும், அறிவு விரிந்தால் அமைதி நிலவும்; அறிவு நிலவ ஆனந்தம் மிளிரும் என்னும் உண்மையைக் கண்டவர் நாவலர் பெருமான்.

நாவலர் பெருமான் ஒரு ஆத்மீகஞானி என்பதை இவற்றால் அறியலாம். இதை உய்த்துணர்ந்து பார்க்கில் எத்தகைய பேருபகாரத்தை அள்ளி மக்கட்கு வழிகாட்டியிருக்கிறார் என்பதை நாம் மறக்க முடியாது.

இந்தப்பெரிய நன்மையைச் சுகமான முறையிற் காட்டித் தந்திருக்கிறார். அவர் ஊணிலிருந்து உடையீறாகவும் நித்திரை விட்டெழுதல் முதல் நித்திரைக்குச் செல்லும்வரையும் காலையிலிருந்து மறுநாள் உதயம்வரையும் மணிமணியாய்க் கோத்து நித்தியம் நடத்த வேண்டிய கருமங்களை இல்லறத் தாருக்குந் துறவறத்தாருக்கும் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்குபடிகளிலும் அநுட்டிக்கக்கூடிய ஆசாரங்களை ஆங்காங்கு நுளைத்து வைத்திருக்கும் நுட்பங்களைக் காணுந் திறன் நம்போல்வார்க்கு எட்டுந் திறனன்று. ஆனால் ஆறுமுகநாவலரை அவர் ஒரு சித்தாந்தியென்றோ அல்லது சைவகுரவன் மட்டுமென்றோ குறிப்பிட முடியாது. அவரின் பரந்த உள்ளத்தில் புதைந்துள்ள பண்பாடுகளே எண்ணிறந்தவை.

சிற்றறிவிற்கெட்டாத பேரருட் செல்வன் ஆனமையா லன்றோ

---

எமக்கு வருகின்ற கேடுகள் யாவற்றுக்கும் நான் என்ற பெரும் தடிப்புத்தான் காரணம்.

நாவலர் ஊண்முதலியவற்றை உண்ணும் வகைவழிகளைக் கூறுமிடத்து எம் அன்னையாகவும் சிறுசிறு பாலபாடம் முதலியவற்றையுதவிய போதெல்லாம் எமக்குத் தந்தையாகவும் தெய்வ வழிபாடு முதலிய வாக்கியங்களை உதவியபோதெல்லாம் எங்கட்கு குருவாகவும் தெய்வமாகவும் ஆங்காங்கு எதுஎது வேண்டுமோ அந்தந்த இடங்கட்கு வேண்டியவற்றை எமக்களித்த அருட்பெரியாருமாகின்றனர். இத்தகைய அருட்குரவரின் செவ்விய திருவடிகளை மறவாது அவர் காட்டிய முறைகளைப் படிப்படியாக அனுட்டித்து வருவோமாகில் இம்மை மறுமை பேற்றினை அடைவது திண்ணம்.


**தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்**



**ஆதீன விலாசம்:**
தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245
அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!


---

திருநீற்றுச் சின்னம் வெற்றுச் சின்னம் அன்று. பிறவியை மாற்றும் சின்னம் என்று உணர்க.

சிவஞானிகளின் திருவருளே இன்று உலகம் நின்று நிலவக் காரணமாக உள்ளது.

# ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள்

பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார்

நாவலர் என்றதும் யாரைக் கருதுகின்றீர்கள்? யாழ்ப்பாணத்து நல்லூரில், கார்காத்த வேளாண் குலத்தில், பாண்டிமழவர் குடியில், ஞானப்பிரகாசர் மரபில் அவதரித்த ஆறுமுகநாவலரையே. ஆம், தமிழ்நாட்டில் அமிழ்தன்ன நாவலர் பலர் உளராயினும், நாவலர் என்ற மாத்திரத்தே நம் உளமலர் ஆறுமுகநாவலரையே தொட்டு இன்பத்தேன் சொட்டும். இஃது எம்மனோர்க்கு இயல்பாயிற்று. அவர் இலக்கியத்திற் கலக்கமற்றவர்; இலக்கணத்தின் நிலைக் களன். ஆகம அறிவில் அழுக்கற்றவர்; மெய்கண்டநூற்பயிற்சியில் துய்யவர்; நியாயநூற் புலமையில் நிகரற்றவர்; நிறையவை நல்லவை என்னும் ஈரவையும் பிணிப்பறச் சொற்பொழிவாற்றும் மணிப்புலவர்; சிந்தனையாற்றலில், சிவபூசை புரிதலில், தூயன மொழிதலில், அடைந்தாப் புரத்தலில் இடையறவுபடாதவர்; தேன்தமிழ் ஓம்பிய சான்றோரில் முன்னணிபெற்ற நன்மணிபபுலவர். நன்னெறிக்கடன் ஓம்பும் செந்நெறியாளர் சிந்தையில் இருப்பவர். ஆதலால் அவர் கவியுமாவர்; கவிமகனுமாவர்; வாதியுமாவர்; வாக்கியுமாவர்; வார்த்தை நூறாயிரத்தில் ஒருவருமாவர். ஆதலினாலேதான் நாவலர் என்றதும் நம்முள்ளம் அவரைத் தொட்டணைக்கின்றது. அங்ஙனம் அவரை உள்ளம் அணைக்குமாறு ஒவ்வொரு தமிழனும் சைவனும் உன்ன வேண்டும்; உன்னிப்பன்ன வேண்டும்; பன்னிப்பணிய வேண்டும்; பணிந்தொழுக வேண்டும். ஒழுகி அவர் விரிந்த சிந்தையையும், குவிந்த குணத்தையும் புரிந்த தவத்தையும் பெறுதல் வேண்டும்; பெற்றனவற்றைப் பிறர்க்கீதல் வேண்டும். ஈந்து நாட்டை நன்னிலமையில் வைத்து விளக்கமுறச் செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்து உவகை பூத்தல் வேண்டும். இவை நாவலருக்கு நாமாற்றும் பூஜைப்பொன்மலர்கள்.

எந்த நாடுகளும் தத்தமக்குரிய நெறிகுன்றி, நினைப்பும் போய் நிலையும் கெட்டு, செய்வன அறியாது தவிர்வன தவிராது திகைப்புறும் வேளையில், அந்நாடுகளின் திகைப்புநீங்கி, தவிர்வன தவிர்த்து செய்வன அறிவுறுத்தி, நினைப்பையும் நிலையையும் உயர்த்தி, நன்னெறி காட்ட, அவதார புருஷர்கள் தோன்றுவரென

---

கடவுளுடைய கருணை வெள்ளத்தில் ஒரு துளி படுமாயின் கோடி வினையும் பறந்து போகும்.

அந்நாடுகள் நம்பி எதிர்பார்த்திருப்பதை நாம் அறிவோம். நம் யாழ்ப்பாணநாடு அந்நியர் ஆதிக்கத்தால் மொழிப்பற்றற்று வளங்குன்றிய காலத்தே, சைவமும் ஓம்புவார் சுருங்கிப் பொலிவிழந்திருந்த காலத்தே, அந்நியர் மதம் நம்மை மறைத்து நம் கலாசாரங்கட்குப் பேரிடர் புரிந்த காலத்தே, தமிழும் சைவமும் புத்துயிர் பெறத்தோன்றிய அறிவு வள்ளல் நாவலர்.

எந்த நிலைக்கும் அத்திவாரம் போன்ற கல்வியை அந்நாட்டு நிலைக்குரிய கலாசாரங்கட்கேற்பக் கொடுக்கவல்ல கல்வி நிலையங்களை அமைத்தும், அவ்வக்காலத்து நேரும் இடையூறு களைக் களைதற்காகிய வாய்மைக் கட்டுரைகளைப் பரப்புதற்கேற்ற பத்திரிகைகட்கு உறுதுணைபுரிந்தும் இலகுவிற் பல நுண்ணிய விஷயங்களைப் பலரும் அறிந்து கொள்ளுதற்கேற்ற சொற் பொழிவுகள் ஆற்றியும் இவற்றிற்கேற்ற வசனநடையைத் தாமே தீர்க்கதரிசியாய் இருந்து ஆக்கியும், அழிந்தொழியும் நிலையில் இருந்த, நம்கலாசாரங்களைக் கண்முன்னர்க் காட்டும் அருமருந்தன்ன நூல்களையும், ஏற்ற பல புதிய நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டும், ஐவகையில் அருந்தொண்டாற்றிய நறுந்தமிழ் நாவலர்க்கிணை நாவலர்தாம்.

அவர், இந்தியாவிற் சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை, கோப்பாய், புலோலி, இணுவில், கொழும்புத்துறை ஆதியாம் இடங்களிலும் கல்வி நிலையங்களை நிறுவினார். அவை தமிழும் சைவமும் தழையவூட்டும் ஊருணிகள். அந்நாவலர் காலத்தே மாகாணத் தலைவராயிருந்த மிஸ்ரர் கே. எஸ்.ஓ. றசல் என்பவர், வண்ணைச் சைவப்பிரகாச வித்தியா சாலையின் பரந்த கொள்கையைப் பற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் நேரிற் போய்க்கண்டு எழுதிய வசனங்கள் பலரும் அறிந்தவை "சைவோதயபானு" என்னும் பத்திரிகையின் தோற்றத்திற்குக் காரணரும் அவரேயாவர்.

இப்பைந்தமிழ் வியாசர்பதிப்பித்த இலக்கணநூல்களும்பல; சமயநூல்களும்பல; தருக்க நூல்களும்சில; அந்தாதிகளும் பல; அறநூல்களும் பல; இதிகாச நூல்களும்பல; புதியனவாக இயற்றிய

---

தன்னைத்தானே சோதனை செய்து கொள்ளலே மனிதன் கடைத்தேற வேண்டிய வழிகளில் முதன்மையான வழியாகும்.

உரைநடை நூல்களும்பல; பாடசாலைச் சிறுவர்பொருட்டு இயற்றிய இளந்தமிழ்நூல்களும் பல; பிறர்மதத்தைப் பரிகரித்துச் சுவமதநாட்டிய கண்டனநூல்களும் பல; புதிதாக உரைகண்ட நூல்களும்பலவாம். அந்நூல்களைப் பகுத்துத் தனித்தனி அவற்றின் மாண்பை எடுத்துரைக்கப்புகின் மிகவிரியும். அன்றியும் அவை உரையுட்படுவனவல்ல. பல்லாற்றானும் அவர் தமிழகத்திற்கு ஈந்த நூற்பெயர்க் கடலை அவர் புராணத்துள்ளும் பிறவற்றுள்ளும் ஆர்வமுடையார் காண்பார்களாக.

செயற்கரிய செய்த பெரியார்களை, அவர் காலத்தே மக்கள் நலிதலும், பிற்காலத்தே அம்மக்கள் பிழையையுணர்ந்து, அவர்கள் பெருமையை நினைந்து யாவரும் போற்றிவருதலும், எஞ்சான்றுமே போற்றிவருதலும், உலகின் எப்பகுதிக்குமுரிய நாகரிகமாயிற்று. எல்லாத் தேசங்களும் தம்மிடத்தே தோன்றித் தம்நலம் மறந்து சேவைசெய்த நாவலர் பெருமானுக்கு விழாவும் பூசையும் எடுத்துவருகின்றன. சில இடங்களிலே நாவலர் ஆற்றிய அருந்தொண்டைப்போல் ஆயிரத்தில் ஒன்றுதானும் ஆற்றாதார்பொருட்டு, எவ்வளவு பொருட்செலவு செய்து, ஞாபகார்த்த மண்டபங்கள் கட்டி, காலந்தோறும் புதிய புத்துயிர் ஊட்டும் நிகழ்ச்சிகளை ஏற்றவாறு நிகழ்த்தி, எவ்வளவு பெருமைபாராட்டிக் கௌரவித்துத் தம் நன்றியறிதலைக் காட்டுகிறார்கள்; அச் செயல் அங்ஙனமாக நாம் இங்ஙனமே கண்டதே கண்டு, செய்ததே செய்து வருதல் நம் பேடித்தனத்தையே காட்டுகின்றது.

இன்று நாம் நிகழ்த்திவரும் நாவலர் நினைவு நிகழ்ச்சிகள் நமக்கு எத்தகைய ஆக்கத்தைப் பயக்கும்? சிறிதும் ஆக்கம் பயவாத முறையில் ஏதோ ஒரு விளக்கை ஏற்றிவைத்துவிட்டு, ஐந்தாறுபேர் கூடியிருக்க, ஒருவர் நாவலர் குணக்கடலில் தாம் வைத்திருக்கும் அளவு கருவியைக் கொண்டு ஒரு கொத்தோ புசலோ முகந்து கொட்டிவிட்டுப்போனாற் போதும் என்ற வாறாக அலட்சியமாகக் கொண்டாடுகிறோம். இஃதென்ன அறியாமை! ஆம் அறியாமைதான். உண்மையில் நாம் இன்னும் நாவலரை அறிய வில்லை; அறிந்தால் அவர் பொருட்டு மடாலயங்கள் கட்டியிருப் போம்; அவற்றை நாவலர் புத்தகாலயங்களாகத் திகழ்விப்போம்.

---

திருநீற்றை உள்அன்புடன் பூசிக் கொண்டால் தவம், தானம், தருமம், விரதம் முதலிய யாவும் செய்த பயனைப் பெறுவார்கள்.

ஆங்கே அறிஞர்களைக் கூட்டுவோம்; அவற்றை இருபகுதிப்பட்ட இளைஞர்கட்கும் முதியோர் கட்கும் எடுத்துரைப்போம். கிராமந்தோறும் அவர் நினைவு விழாவை நிகழ்த்துவோம்· அவ்விடமெல்லாம் அறிஞர்களை வரவழைத்து அந்நாவலருடைய அருஞ்செயல்களையும் குணங்களையும் பிறவற்றையும் எடுத்து மொழியச்செய்வோம்· நாமே நாவலராய், நாவலர் புத்தகாலயமாய், நம்நாடாய், உலகமாய் உயர்வெய்துவோம். அப்படி முடிந்ததொன்றுமில்லை என்று தான் கூறவேண்டும். அவர் விரிந்து பரந்த நோக்கத்தை எரிந்து புகைந்து குறுக்கே முனைந்து நிற்கிறோம். ஒரு திருநாவலர் தோன்றிய தியாகபூமி, இன்று தியாகம் மருந்துக்கும் கிடைக்கப்பெறாதாய் இருக்கின்றது என்ற இழிபெயரேற்று நிற்கிறது. நாவலரால் உயர்வெய்திய நாடு, நாவலர் பெயர் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ளுதலையே விரும்பும் நம்மால் தாழ்வெய்திக் கிடக்கின்றது. நாவலர் மீண்டும் வருவாரா?

---

## நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி அமையம்

26-3-2011 சனிக்கிழமை ஆத்மீகவள்ளல் நா. முத்தையா அவர்கள் வழிவந்த பக்தர்கள், மாணவர்கள் சைவத் தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரின் எழுச்சியினால் ஆத்மஜோதி அமையம் என்ற நிறுவ்னம் நாவலப்பிட்டியில் உதயமாகியுள்ளது.

சமய சமூகநல செயற்பாடுகளின் மூலம் மலையகத்தில் வாழும் இந்து மக்களிடையே நீடித்து நிலைக்கக்கூடிய சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதே இவ் அமைப்பின் நோக்கமாகும்..

சமயம் சார்ந்த நிறுவனங்கள் சமூகநலத் திட்டங்களையும் செய்யவேண்டும். சமூகநலத் திட்டங்களினூடாக மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டி இந்து சமயத்தின் புனிதத் தன்மையைப் பேணி வளர்க்க வேண்டுமெனபது ஆத்மஜோதியாரின் விருப்பமாகும். அவர் தன் வாழ்நாளில் 43 வருடங்கள் பெரும்பணியாற்றிய மலைய கத்தில் சுடர்விட்டு பிரகாசிக்க ஆத்மஜோதி அமையம் ஆரம்பித்துள்ளது.

---

நல்ல நூல்களை படிப்பதனால் உனது உணர்ச்சி வளரும்.

தம்மைத்தாமே உயர்த்திக் கொண்ட தவஞானிகளுக்கு உலகில் உள்ள வேற்றுமைகள் மறைந்து ஒழிகின்றன.

ஆன்ம திருப்தியை உண்டு பண்ணுவது அன்னதானம் ஒன்றேயாகும்.

# அமரர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

அ. சிவானந்தநாதன்

சைவர்களுக்கு கோயில் என்றால் தமிழகத்தில் உள்ள தில்லைச் சிதம்பரத்தையே குறிக்கும். சைவமக்கள் இக்கோயிலை தில்லை திருச்சிற்றம்பலவன் கோயில் என்றும் நடராசர் கோயில் என்றும் இன்றும் போற்றுவதைக் காணலாம். உலக வாழ்க்கையில் மக்களுக்கு நேரும் அச்சத்தை அகற்றி ஆனந்தம் நல்குதற் பொருட்டே இறைவனின் ஐந்தொழில் கூத்து தில்லையில் நடைபெறுகிறது. தில்லைப் பெருங்கோயிலைச் சூழ தெய்வத் தன்மை வாய்ந்த சிவகங்கை முதல் பத்துத் தீர்த்தங்கள் உண்டு. இதில் நீராடி மூழ்கினால் கவலை, உடற்பிணி அறவே நீங்கும். வீடுபேற்றுக்கும் துணைநிற்கும். இப்பெருங்கோயிலின் தென்திசையில் உள்ளது புலிமடுநீர் நிலையம். புலிமடு நீரில் இறந்தோர் நற்கதி அடைதற்பொருட்டு எலும்பினை இடுதல் நெடுநாளைய மரபாக நிலைபெற்றுள்ளது. இங்கு இடப்படும் எலும்பு நீரில் கரைந்து போதல் பலரும் அறிந்த செய்தியாகும். மத்தியந்தனமுனிவரின் மகன் வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும் தில்லை திருமூலட டானப் பெருமானை பத்தியோடு தூய்மையாக வழிபட்டமையால் அப்பெருமானின் திருக்கூத்தனை நேரில்கண்டு நெஞ்சம் நெகிழ்ந்துருகித் தலைமேற் கைகுவித்து வணங்கிப் போற்றி இன்பம் பெற்றார்கள்.

தில்லைச்சிதம்பரம் பூலோக கயிலாயம் என்ற பெருமைக்குரியது. எல்லாத் திருக்கோயில்களில் உள்ள சிவகலை அனைத்தும் நடுயாமத்தில் தன்னிடம் வந்து சேரப்பெற்ற ஒப்புயர்வில்லாத ஆலயம் சிதம்பரமேயாகும். சைவசமய ஆசிரியர்கள் நால்வரும் இத்தலத்தைப் போற்றி அவன்புகழ்பாடி அவன் அருளால் பல அற்புதங்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தலத்தில் உள்ள பரம்பொருளை உமாபதி சிவாச்சாரியார் “உலகுதொழ நட மாடும் தில்லைச் சிற்றம்பலம் போற்றி” என்று மனமுருகிப் பாடியுள்ளார். இத்தகைய தெய்வீகத்தலத்தை பெரும் பற்றாகக் கொண்டு நேரில் சென்று பலமுறை ஆராத அன்போடு கண்ணீர் மல்க வழிபாடு செய்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலர் அவர்கள். இறைவனின் திருவிளையாடல்கள் நடைபெற்ற பல திருக்கோயில்களைத் தேடிச்சென்று தொழுது இன்பம் பெற்றவர். மனிதப் பிறவியில் அவன் அருளால் அவன்தாள் வணங்கும் பாக்கியத்தை பெற்றவர் உத்தமப் பெரியார் நல்லைநகர் நாவலர் அவர்கள்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனறு அருளிய ஔவை வாக்கினை இறுதிமூச்சுவரையும் பேணிக்காத்து ஒழுகியவர் நாவலர் அவர்கள். அன்னியர் ஆட்சியில் மேன்மை கொள் சைவநீதியை மேன்மைபெற காலத்திற்கு ஏற்ற பலவேறு பணிகளை அவன் அருளால் நிறைவாகச் செய்த பெரியார் நாவலர் அவர்கள். இதனால் மக்கள் மத்தியில் தெய்வீகத்தன்மை கொண்ட உத்தமராகத் திகழ்கின்றார். இவர் இறைவனின் சக்தியைப் பெற்றவர். ஒழுக்கத்தை தன் உயிரிலும் மேலாக மதித்தவர். சிறந்த நல்லறிஞர். வாய்மையும் நடுநிலையும் கொண்டவர். சொல்வன்மையும் மனவுறுதியும் கொண்டவர். எழுத்து ஆற்றலும் மிக்கவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த அறிவினை உடையவர். பழந்தமிழ் நூல்களில் புலமையும் மிக்கவர். சைவசமய நூல்களில் நுண்ணறி வினை உடையவர். இதனால் தமிழ்மொழியையும் சமயத்தையும் மக்கள் மத்தியில் தனது சொற்பொழிவினாலும் பதிப்பு நூல்களினாலும் கட்டுரைகளின் மூலமாகவும் வெளிப்படுத்தி திடமான நம்பிக்கையை உருவாக்கியவர் நாவலர் அவர்கள். எல்லோரும் கல்வியைக் கற்க வேண்டும் என்று வற்புறுத் தியதோடு ஏழைமக்களும் கல்வியைப்பெற அயராது உழைத்தவர். இதன் வாயிலாக தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பினை மக்களின் உள்ளத்திலும் சிந்தனையிலும் சுடர்விடச் செய்தவர்.

மேலும் ஊர்தோறும் பள்ளிக்கூடங்களைத் தாபித்து உங்களுக்குள்ளேயே கல்வி அறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவற்றை நடத்துவியுங்கள் என்று நாவலர் மக்களை வேண்டுதல் செய்தார். நாவலர் குருகுல கல்விமுறையிலும் இலவசக்கல்வி முறையிலும் மாணவர்களுக்கு கல்வியைப் போதித்து தனக்குப் பின்பு மாணவர் பரம்பரை ஒன்றை தோற்றுவித்த செயல் கல்விப்பணிக்கு செய்த பெரும்பணியாகும். நாவலர் செய்த காலத்துப்பணியை நாம்

எல்லோரும் உள்ளத்தால் போற்றி ஒழுகிச் செயற்பட்டால் நம் இனத்தின் பெருமை உலக மக்களின் உள்ளத்தில் சிறப்பிடத்தினைப் பெறும் என்பது நிச்சயம். 1876 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மக்கள் கொடிய பஞ்சத்தால் வாந்திபேதியினால் துன்பமுற்ற வேளையில் நாவலர் பலவழிகளில் நற்பணி செய்தார். கஞ்சித் தொட்டி வைத்து கஞ்சி ஊற்றி மக்களுக்கு மன ஆறுதலை அளித்த நாவலரின் பணி எக்காலத்திற்கும் சிறப்பிற்குரியதொன்றாகும்.

நாவலர் அவர்களின் சமயப் பணிகள் தமிழகத்திலும் இடம்பெற்றுள்ளது. தமிழக மக்களுக்கு இவர் ஆற்றிய கல்விப்பணி, சமயப்பணி, அச்சுப்பணி, பதிப்புப் பணி கோயிற்பணி மிகச்சிறப்பிற்குரியது. தமிழறிஞர்கள் நாவலரின் ஒப்பற்ற பணியை கண்டு வியந்து போற்றியுள்ளார்கள். நாவலர் சிதம்பரத்தில் நிறுவியுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலை அவ்வூர் பிள்ளைகளுக்கு கல்வி அறிவை திறம்பட நல்கியள்ளது. தமிழகத்தில் உள்ள ஆதீனங்களிலும் கோயில்களும் ஆற்றிய சமயச்சொற்பொழிவுகள் மிகுந்த மதிப்பினை மக்கள் மத்தியில் பெற்றுள்ளது. சிதம்பரம், சென்னை ஆகிய இடங்களில் நிறுவிய அச்சகத்தின் வாயிலாக பல நூல்களை பதிப்பித்து எல்லோரின் மதிப்பினைப் பெற்றுள்ளார். நாவலர் பதிப்பினை தமிழறிஞர்கள் சிறப்பாகப் பாராட்டியுள்ளார்கள்.

தமிழகத்தில் பழந்தமிழ் ஏட்டுச்சுவடுகளை அழியாது நூல்வடிவில் வெளிவருவதற்கு உழைத்த தமிழறிஞர்களின் வரிசையில் நாவலர் பெருமான் உன்னதமான இடத்தினைப் பெறுகின்றார். தமிழகத்தில் உள்ள திருவாவடுதுறை ஆதினத்தலைவர் சைவப்பெரியார் கந்தப்பிள்ளை ஆறுமுகம் அவரின் சமயச் சொற்பொழிவினைக் கேட்டு மகிழ்ந்து அன்னாருக்கு “நாவலர்” என்னும் சிறப்புப்பட்டத்தை வழங்கி 1849 ஆம் ஆண்டு கௌரவித்தார். இதனால் திரு. க. ஆறுமுகம் அவர்கள் “ஆறுமுகநாவலர்” என்று போற்றப்பட்டார். இப்பெயர் இன்று சைவஉலக மக்கள் மத்தியிலும் சிறப்பிடத்தினைப் பெற்றுள்ளது.

நல்லூரில் ஆராய்ச்சி உத்தியோகம் வகித்த கந்தப்பிள்ளை அவர்களுக்கும் துணைவியார் சிவகாமி என்னும் நங்கைக்கும் புகழ்மிக்க மகனாக 18-12-1822ஆம் திகதி

புதன்கிழமை பிறந்தவர் ஆறுமுகம் அவர்கள். 05-12-1879 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் உள்ள தம் இல்லத்தில் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இவருடைய திருமேனி யாழ்ப்பாணத்தில் உள்ள கோம்பையன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. கந்தப்பிள்ளை குடும்பத்தில் ஆண்பிள்ளை ஆறுபேர் பெண்பிள்ளை ஆறுபேர் பிறந்தமை நினைவு கொள்ளத்தக்கது. நாவலரின் தந்தையார் 1766 ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தையார் பரமானந்தர் அவர்கள் துணைவியார் உலகாத்தை என்னும் நங்கையாகும். கந்தபபிள்ளை அவர்கள் 02-06-1837 ஆம் திகதி புதன்கிழமை மாரடைப்பினால் இயற்கை எய்தினார்.

சைவப்பெரியார் ஆறுமுகநாவலரின் முதலாவது சமயச் சொற்பொழிவு வண்ணார்பண்ணை வைத்தீசுவரர் ஆலயத்தில் 31-12-1847 ஆம்திகதி நடைபெற்றது. இவரின் இறுதிப் பிரசங்கம் 1879ஆம் ஆண்டு சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைத்தினத்தில் இடம்பெற்றது. நாவலர் செய்த காலத்துப்பணி ஞாலத்திலும் மிகப்பெரிதாகும். ஈழத்தில் பிறந்த நாவலரை மறவாது போற்றுவது அவருக்கு யாம் செய்யும் கைமாறாகும்.

கனடா இந்து சமயப் பேரவையினால் உருவாக்கப் பெற்ற நாவலர் சிலையின் விழா 24-09-2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11:00 மணிக்கு ரிச்மண்கில் பிள்ளையார் ஆலயத்தின் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று 117 பக்கம் கொண்ட நாவலர் பெருமான் மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. கனடாவில் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையைத் தோற்றவித்தவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள். இப்பேரவை 1994 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் அமைக்கப்பெற்றது. 1995 ஆம் ஆண்டு மீண்டும் கனடாவிற்கு ஆத்மஜோதி முத்தையா வருகைதந்து சமயப்பணியையும் கல்விப்பணியையம் மேற்கொண்டார். 08-09-1995 ஆத்மஜோதி முத்தையா அவர்கள் மொன்றியலில் இறைவனடி சேர்ந்தார். இவர் நாவலப்பிட்டியில் 1948 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிட்ட ஆத்மஜோதி ஆன்மீக இதழ் கனடாவில் 1999 ஆம் ஆண்டு வெளிவரத் தொடங்கியது. இது காலாண்டு இதழாகும். ஆறுமுகநாவலரின் சிலை ரொறன்ரோ, மிசிஸ்சாகா, மொன்றியலில் உள்ள ஆலயங்கள்தோறும் பவனிவந்தமை

குறிப்பிடத்தக்கது. இதன்பின்னர் இச்சிலை 07-11-2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் பேரவையின் குருபீடத்துடன் வைத்து வணங்கபபெற்றது. இதன் பின்னர் பேர்ச்மவுண்டு வீதியிலுள்ள 1473 இலக்கம் கொண்ட பேரவையின் நிரந்தரமான ஆத்மஜோதி இல்லத்தில் நாவலர்சிலை வைக்கப்பெற்று பூசை வழிபாடுகள் 02-06-2010 முதல் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. கனடாவில் வாழும் தமிழ் மக்கள் ஆத்மஜோதி நிலையத்திற்குச் சென்று நாவலர் பெருமானின் சிலையை நேரில் கண்டு வணங்கினால் மனநிறைவும் கல்விஞானமும் ஒழுக்கமும் மேன்மையும் பெறலாம் என்பது நிச்சயம். ஈழத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் அயராத முயற்சியினால் 29-06-1969 ஆம் திகதி நல்லூரில் நாவலர் சிலை நிறுவப்பெற்றது. தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. சி. என் அண்ணாத்துரை அவர்கள் கூறிய, நாவலர் பிறந்த ஊரில் நாவலர் சிலை நிறுவப்பெற வேண்டும் என்ற கருத்தே இதறகுக் காரணமாகும். 20-06-1969 ஆம் திகதி கொழும்பில் இருந்து நாவலர் சிலை பவனி யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்பட்டதை இவ்வேளையில் நினைவுகொள்வது நன்று. இவ்விழா மிகச்சிறப்பாக பெருந் திரளான மக்கள் மத்தியில் நிகழ்ந்தமை பெருமைக்குரியதாகும். இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கமண்டபத்தில் நாவலர் சிலை 17-12-2006 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைக்கப்பெற்று பூசைவழிபாடுகள் மிகச் சிறிப்பாக நடைபெற்றுவருகிறது. இன்று தமிழ் மக்கள் வாழும் இடங்கள் தோறும் நாவலரின் நற்தொண்டு நற்புகழைப் பெற்றுள்ளது. நல்லூர் ஆறுமுகநாவலரது புகழுடம்பு நீடுழி வாழ்க. இன்று ஆத்மஜோதி நிலையத்தில் நாவலர் சிலைக்கு தினமும் தீபஒளி காட்டி வழிபடும் அன்பர் சிவ. முத்துலிங்கம் அவர்கள் முற்பிறவியில் செய்த புண்ணியப் பயனே இதற்கு காரணமாகும். நாவலர் சிலை செய்வதற்கு 5000 டொலர் நன்கொடை அளித்த அன்பர் அமரர் திரு செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்களின் கொடைச்சிறப்பையும் இவ்வேளையில் நினைப்பது பொருத்தமாகும். இவர் 29-10-2010 ஆம் திகதி கனடாவில் இறைவன் திருவடியை சேர்ந்தார்.

---

அன்பு, வெள்ளம் ஓடுகின்ற ஆலயத்தில் உதிர வெள்ளம் ஓடக்கூடாது.

# ஆத்மஜோதி இல்லத்தில் பிரதோஷ வழிபாடு

**வ. உமாகாந்தன்**

இந்து சமயப்பேரவை ஆயுட்கால உறுப்பினர்

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாம் எல்லோருமே சைவர்களாகவே பிறந்திருக்கிறோம். ஈழத்தில் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னால் சில தேவைகளின் நிமித்தமும், கட்டாயத்தினாலும் மதமாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஈழத் தமிழர்களாகிய எமது சமயம் சைவ சமயம். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவபெருமானை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தைச் சேர்ந்தவர்களாக நாம் இருப்பது சைவசமயத்தினராகிய எமக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

ஈழத்திலே சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்து *அறநெறியில் வாழ்ந்த எமது சமுதாயம் பின் நாட்களிலே* புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளுக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டது. புலம்பெயர் நாடுகளிலும் பல புதிய சிக்கல்கள் தோன்றின. சமயத்தையும், தமிழையும் நாம் விடாது பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் எம் எல்லோருக்கும் இருந்தாலும் அதைச் செயற்படுத்தி ஒரு நிலைக்குக் கொண்டு வருவது என்பது உடனடியாகச் சாத்தியமானதாகவும் இருக்க வில்லை.

உறவுகளையும் நாட்டையும் இழந்து வேதனைகளை மனதில் தாங்கிக் கொண்டு, இந்த நாட்டில் வாழப் பழகப் போராடிக் கொண்டிருக்கின்ற எம்மக்களின் துன்ப, துயரச் சூழ்நிலைகளை ஒரு சிலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். தங்கள் கொள்கைகளே சரி என்று இயங்கும் குழுக்கள், உங்கள் வேதனைகளுக்கும் துன்பங்களுக்கும் விடுதலை வாங்கித் தருகிறோம். என்று கூறி எம் மக்களில் சிலரின் மனதை மாற்றி மதமாற்றத்தை நிகழ்த்துவதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார்கள். மதம் மாற்றப்பட்ட வர்களுக்குத் துன்பங்களில் இருந்து விடுதலை கிடைத்ததா என்றால் அது இன்னும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருந்து கொண்டிருக்கிறது.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலே ஒவ்வொரு நாட்களையும் போராட்டத்துக்கு மத்தியில்தான் கழிக்க வேண்டும் என்பதினாலும் மாயைகளை உண்மை என நம்பி மயங்குவதனாலும் குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்கள் மன உளைச்சல்களுக்கு

ஆளாகி மனதில் அமைதி வேண்டும் என்ற நிலையில் எங்கே போனால் இதை அடையலாம் என்ற ஆதங்கம் பொதுவாக இன்று எல்லோர் மனதிலும் உள்ளது. இந்து சமயத்தில் பணக்காரர்களாக ஆக்கப்பட்ட சில கடவுள்களினதும் கடவுளின் அவதாரங்கள் போன்றனவற்றின் வருகையும் பலருக்கு தற்காலிக மன அமைதியைக் கொடுத்திருக்கிறது என்பது உண்மைதான்.

காலத்திற்குக் காலம் எம்மத்தியில் பல மகான்கள் தோன்றி மக்கள் எவ்வாறு தங்களது வாழ்க்கையை அறநெறிகளினூடாக வாழவேண்டும், நிரந்தர சந்தோஷத்தையும் மன அமைதியையும் வீடுபேற்றையும் அடைவது எப்படி என்பதுபற்றிச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மகான்களின் வரிசையில் ஆத்மஜோதி சுவாமிகள் அவர்கள் எம்மக்கள் மத்தியில் அரும்பெரும் பணிகளை ஆற்றிய ஓர் மகான் ஆவார். அவர்கள் 1994, 1995 காலப்பகுதிகளில் கனடாவுக்கு வருகை தந்திருந்தபோது தமிழ்வேதங்களாகிய தேவாரத் திருமுறைகளை ஓதுவதால் உள்ள பயன்கள் பற்றியும் வீடுகளில் கூட்டுப்பிரார்த்தனைகளை செய்வதனால் உள்ள நன்மைகள் பற்றியும் தெளிவாக விளக்கியிருந்தார்.

ஆத்மஜோதி சுவாமிகளால் கனடாவில் உள்ள எம்மக்கள் வாழ்வில் சுபீட்சமும் சந்தோஷமும், ஆன்மா ஈடேற்றமும் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதுதான் இந்துசமயப் பேரவை. இந்த நிறுவனம் ஆத்மஜோதி இல்லம் என்ற நிலையத்தை வாங்கி இயக்கிவருகிறது. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பின் திருக்கூட்டத்தினர் இன்று தமிழ்வேதங்களாகிய திருமுறைகளை பன்னிரண்டு ஆண்டுகளாகக் கனடாவிலும் இந்தியாவிலே நாயன்மார்களினால் பாடல்பெற்ற தலங்களிலும் முற்றோதல் செய்து வருகின்றனர். இந்தியாவிலும் கனடாவிலும் திருமுறை முற்றோதல் விழா எடுக்கும் அமைப்பாக தொடர்ந்து சமயப்பணிகளைச் செய்து வருகிறது.

ஆத்மஜோதி இல்லத்திலே (1473 Birchmount Rd) திருமுறை முற்றோதலும் பிரதி சனிக்கிழமை தோறும் சிவபூசையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பிரதோஷ நாட்களிலே அங்கே சிவனுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு நடத்தப்படும். கேட்பதை மட்டும் அல்ல கேட்காததையும் சிவபெருமான் தருபவர். அவனைப் பணிந்தால் நாம் எதையும் கேட்கவேண்டியதில்லை. எங்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவனே தெரிந்து எங்களுக்குக் கொடுப்பான். ஏனெனில் அவன் அன்பு மயமானவன். சிவன் அன்றி வேறு ஒரு தெய்வம் இல்லை. பரலோகத்தை அடைய

வேண்டின் சிவனை இறுகப்பற்ற வேண்டும்.

அந்தப் பரம்பொருளாகிய சிவனுக்கு ஆத்மஜோதி இல்லத்தில் திருக்கூட்ட அடியவர்கள் பிரதி சனிக்கிழமைகளிலும் பிரதோஷ நாட்களிலும் காலையில் இருந்து மாலைவரை திருமுறைகள், திருப்புகழ் போன்றவற்றை முற்றோதி அபிஷேக ஆராதனைகளைச் செய்து வருகிறார்கள். இந்த ஆத்மஜோதி இல்லத்திலே தான் 22-11-2011 அன்று பிரதோஷவிரதம் மிகவும் பக்தியாகவும் உணர்வுபூர்வமாகவும் கொண்டாடப்பெற்றது. தன் வாழ்வை சமயத்தொண்டு, ஆன்மீகப் பணிகளுக்கு அர்ப்ணித்து வாழ்பவரும் திருமுறை முற்றோதல்களையும் சிவபூசையையும் முன்னின்று நடத்தி வருபவருமான திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம அவர்களது பிறந்ததின மணி விழாவும் இன்றைய தின பிரதோஷவிரத நாளிலே வந்து அமைந்ததும் இன்னொரு சிறப்பாகும்.

செவ்வாய்க்கிழமை 22-11-2011 அன்று திருக்கூட்ட அடியவர்களால் காலையிலேயே பிரார்த்தனை மண்டபம் நிறைந்து காணப்பட்டது. காலை 7:30 மணிக்கு திருவாசக முற்றோதலுடன் தொடங்கி மதியம் 12 மணிக்கு சிவபூசை ஆரம்பமாகியது. சிவநாம சங்கீர்த்தனத்தின் ஒலி பிரார்த்தனை மண்டபத்தை நிறைத்திருந்தது. திருக்கூட்ட அடியவர்கள் சிவலிங்கத்துக்கு பால் ஊற்றி, பூ வைத்து வழிபாடு செய்தும் பின்பு ஒவ்வொருவராக பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு சிவலிங்கத்தை மலரினால் அர்ச்சித்தும் வழிபட்டார்கள். அதன்பின் பஞ்சபுராணத்துடன் பிற்பகல் ஒன்றரை மணிக்கு சிவபூசை நிறைவடைந்து அன்னதானம் வழங்கப்பெற்றது. சிவபூசை ஆரம்பித்து முடியும் வேளை வரை அங்கே ஒரு தெய்வீக சக்தி நிறைந்து காணப்பெற்றது. வேறு எண்ணங்கள் எவையும் அவர்களை ஆட்கொள்ளவில்லை. திருக்கூட்ட அடியவர்கள் எல்லோருமே அந்தத் தெய்வீக சக்தியை உணர்ந்ததாகச் சொல்லிக் கொண்டார்கள்.


இந்த ஆத்மஜோதி இல்லத்திலே வீற்றிருக்கின்ற சிவனது ஜோதியும் குருபீடத்திலே உள்ள மகான்களினது ஜோதியும் சேர்ந்து ஆத்மஜோதி இல்லத்தைப் பிரகாசித்துக் கொண்டிருக்கச் செய்கிறது என்பதை அங்கு செல்பவர்கள் யாவருமே உணர்ந்து அறியலாம். கனடாவிலே உள்ள ஒரே ஒரு திருமுறைக் கோவிலாகவும் இது உள்ளது என்றால் அது மிகைஅல்ல. சிவன் அருளே முக்தி தரும்.

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

# சாயி அவதாரமும் பயன்பாடுகளும்

## பாகம் - 3

சு. சிவதாஸ்
(முன்னாள் ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அற்புதங்கள் கணக்கற்றவை. அற்புதங்களை பெரிதுபடுத்துபவர்களைப் பார்த்து நான் எனக்குள்ளே சிரிக்கிறேன் என்று பாபா கூறியதாக முன் கட்டுரையில் குறிப்பிட்டேன். தனது அன்புதான் பெரிது, அற்புதமல்ல என்றார். அது மெய்மையே தான். உலக வாழ்வின் துன்பயில்புகளால் பாதிக்கப்பட்டு, சாயியை சரண் என்று நாடியவர்களுக்கு உத்தியோக வாய்ப்பு இடமாற்றம், திருமணம், பணப் புழக்கம், நோய்நீங்கல் போன்ற இன்னோரன்ன அருட்செயல்களை பகவான் இன்றும் செய்துகொண்டே இருக்கின்றார். சத்யசாயிக்கு 37 வயதில் ஒரு பெரிய சம்பவம் இடம்பெற்றது. தொடர்ச்சியாக எட்டு நாட்கள் இடப்பக்கம் பாரீச வாதத்தால் பாதிக்கப்பட்டு கட்டிலிலே கிடந்து அவஸ்தைப்பட்டார். அந்த நாட்களில் இரண்டு தடவைகள் இருதயம் பாதிக்கப்பட்டது. பல திக்குகளிலும் இருந்து டாக்டர்கள் வந்து சிகிச்சை செய்ய முயன்றனர். பகவான் அறவே தடுத்துவிட்டார். 8ஆம் நாள் தன்னை ஒரு நாற்காலியில் உட்கார வைக்கச் சொல்லி, கொஞ்ச நீர் கேடடார். வலக்கரத்தினால் நீரை எடுத்து இடப்பக்கத்து தலை தோள், தொடை, கால்களுக்கு தெளித்துத் தடவினார். உடனே எழுந்து நினறு பேச ஆரம்பித்தார். அப்போது அவர் சொன்ன கதை இதுதான். “பரத்துவாச மகரிஷி 300 ஆண்டுகளாக வேதங்களை கற்று முடிக்கப் பாடுபட்டார். பிரமதேவனிடம் இன்னுமொரு 100 வருடங் கேட்டார். அப்போது பிரமதேவன் சொன்னதாவது நீ இந்த 300 வருடங்களிலும் கற்றது 3 கைப்பிடி மண்ணளவுதான். நீ கைலைக்குச் சென்று சிவனை அழைத்து அவர் சொல்லும் யாகத்தை செய். அப்போது நீ வேதங்களைக் கற்ற பயனைப் பெறுவாய். அதன் பிரகாரம் பரத்துவாச மகரிஷி

---

இடைவிடா அன்பினால் தான் அருள்வளரும். அன்பில்லையேல் அருளைப் பெறமுடியாது.

யாகத்தை ஒழுங்கு செய்துவிட்டு, கைலைக்குச்சென்றார். அந்த நேரம் பார்வதியும் பரமசிவனும் நடனப் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். எட்டு நாட்களாக ஆனந்த தாண்டவம் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. மகரிஷியோ, கடுங்குளிருக்குள் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். நடனம் ஓயவில்லை. பார்வதி ஆடிக்கொண்டே மகரிஷியைப் பார்த்து வரவேற்கும் புன்முறுவல் செய்தாள். மகரிஷியோ அதனை தவறாகப் புரிந்து தன்னை அன்னை ஏளனம் செய்கிறாள் என்று எண்ணி திரும்பு வதற்கு இறங்கலானார். இதை தடுப்பதற்கு பராசக்தி மகரிஷியின் இடப்பாகத்தை முடக்கிவிட்டாள். மகரிஷி வீழ்ந்துவிட்டார். உடனே பரமசிவன் அவ்விடத்திற்கு ஓடிச்சென்று, தனது கமண்டலத்திலிருந்து நீர் எடுத்துத் தெளித்து தடவி அவரது வாதத்தைக் குணப்படுத்தி யாகத்தை முன்னெடுக்கு மாறும் தாமும் பார்வதியும் வந்து ஆசீர்வாதம் வழங்குவோம் என்று உறுதி கூறியும் அனுப்பிவிட்டார். அதற்கிணங்க முனிவரின் யாகத்தை கண்டுகளித்து ஆசீர்வதித்து பின்வரும் வசனங்களையும் சிவனார் சொன்னார். "நாம் மும்முறை பூமியில் அவதரிக்க இருக்கின்றோம். முதல் சிவன் மட்டும் சீரடியில் அவதரிப்பார். அதன் பின்னர் சிவனும் சக்தியும் இணைந்து சத்யசாயி என்னும் பெயரில் அவதரிப்போம். அதன் பின்னர் சத்தி மட்டும் பிரேமசாயி என்ற பெயரில் அவதரிப்பார்.

மேற்படி கதையை சத்யசாயி தனது 8 நாள் சுகயீனத்துக்குப் பிறகு கூறி மகரிஷி 8 நாள் குளிரில் வாடியதை சமன்செய்யும் நோக்கமாக தமது சக்தியின் பாகம் சுகயீனமுற்று இருந்ததாகக் கூறினார். அத்துடன் ஒரு பக்தனுடைய இருதய தாக்கத்தையும் இந்த நாட்களில் தாமேற்று பக்தனைச் சாவிலிருந்து காப்பாற்றியதாகச் சொன்னார். இவ்வாறு பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா, தாமொரு சிவசக்தி அவதாரம் என்பதையும் மக்களுக்கு கூறியுள்ளார். தாமே உருவாக்கும் விபூதியை பெருமளவில் உபயோகித்ததும் பளிங்குச்சிவலிங்கங்களை தமது வாயிலிருந்து சிவராத்திரி காலங்களில் வெளியில் எடுத்ததையும் நோக்குகின்ற போது இவருக்கும் சிவனுக்கும் சம்பந்தம் உண்டு என்பதை உணரலாம். சாயி காயத்திரியை ஆக்கிய சுப்பிரமணிய சாஸ்திரிக்கு பகவான் பாபா, ஒரு முறை தமது கையசைப்பினால் ஒரு படம்

---

பரம்பொருளாகிய பதியுடன் ஆன்மா கூடுவதனால் வரும் இன்பமே பேரின்பம். அந்த இன்பத்தை அடைய முயற்சி செய்.

எடுத்துக் கொடுத்தார். எடுத்துக் கொடுத்து இதுதான் எனது உண்மைச் சுபரூபம் என்றும் சொன்னார். அந்தப் படமோ ஒரு சிவலிங்கமே தான். அந்தப் படத்தைத் தான் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திலே தலைப்புக்கு அருகில் நீங்கள் பார்ப்பது.

இவ்வாறு பல இடங்களிலும் தம்மை சிவசக்தி அவதாரமாக பாபா கூறிவந்தாலும் பக்தர்களுக்கு பக்தர்களின் இஷ்ட தெய்வத்தின் வடிவிலே அவர் காட்சி கொடுத்திருக்கிறார். விநாயகராக, கிருஷ்ணராக. ராமராக நாராயணனாக, அம்மனாக முருகனாக இதுபோன்ற இன்னும் பல வடிவங்களாக பாபா காட்சி கொடுத்தார். பாபா பேசிய கட்டுரைகள் அடங்கிய நூல்களும் பாபா எழுதிய நூல்களும் பாபாவைப் பற்றிப் பிறர் ஆக்கும் நூல்களும் கணக்கில் அடங்கா. அவரது கீர்த்திகளும் தொண்டு நடவடிக்கைகளும் ஏறக்குறைய உலகில் உள்ள எல்லா நாடுகளிலுமே பரவியுள்ளது. பக்தர்களின் மொழியிலே பக்தர்களோடு பேசுவதும் இவரது தனிச்சிறப்பாகும். இவரது அற்புதங்கள் உலகெங்கிலுமே நடந்தேறுகிறது. எல்லா உலகியல் மெய்யியல் ஞானங்களும் இவருக்கே தெரிகிறது. இவரது மனிதநேயத் தொண்டுகளை எல்லாச் சாதுக்களுமே வியந்து நோக்குகிறார்கள். இவ்வாறு ஒரு சாதாரண மனிதனாகவே பிறந்து மறைந்த இவரை அவதாரவரிசையில் வைத்து எண்ணுவதில் தவறொன்றும் இல்லை.

அடியேனது வாழ்வில் நான் பத்தாம் வகுப்பு படிக்கின்ற காலத்திலே சாயிபாபாவின் போட்டோப் படம் நண்பன் மூலம் கிடைத்தது. நண்பன் ஒருவர் தாமும் போட்டோ வைத்திருந்து எனக்கும் ஒன்றைத்தந்து, பாபாவின் பெருமைகளைக் கூறினார். அந்த நாடகளிலே பாபா எனக்கும் நண்பருக்கும் சில அற்புதங்களை நிகழத்தினார். எனினும் எனக்கு 22 வயதளவில் பொங்கல் தினமொன்றில் வீடடில் வைத்திருந்த படமொன்றை நான் பக்குவமாய் பக்தியோடு நோக்கிக் கொண்டிருக்கையில் படத்தில் உள்ள தமது வலக்கண்ணை மூடித்திறந்தார். நானோ பரவசமடைந்து திரும்பச் செய்யுங்கள் செய்தால் தான் நம்புவேன் என்றேன். உடனே திரும்பவும் கண்ணடித்தார். பரவசமெய்தி நான் அன்று பிற்பகல் டாக்டர் சோமசுந்தரம் அவர்களது இல்லத்தில் இடம்பெற்ற பஜனைக்குச் சென்றேன். என்னே அதிசயம். அங்கேயிருந்த

---

திருவருள் குருவருள் என்ற இரு கண்ணாடிகளின் உதவியால் இறைவனுடைய ஞான வடிவைக் காணலாம்.

படத்திலிருந்தும் மிக தெளிவாகக் கண்ணடித்தார். ஆச்சரியத்தால் என் நெஞ்சிலே எனது இடக்கையால் அடித்து அந்த வியப்பை நிறுத்தினேன். அந்தளவு மெய்யான கண்சிமிட்டலே அதுவாகும். அதே காலப்பகுதியில் ஒருநாள் காலை அவரது படத்துக்கு தூபம் இடும்போது பதின்மூவாயிரம், பதின்மூவாயிரம், பதின்மூவாயிரம் என்று மும்முறை ஒரு அசரீரி மாதிரி எனக்குக் கேட்டது. அன்று பின்னேரம் என்னிடம் ஒரு புதிய நபர் காரில் வநது லண்டனில் இருக்கும் எனது தம்பி என்னிடம் கொடுக்கச் சொன்னதாகச் சொல்லி பதின்மூவாயிரம் காசுதந்தார். அந்தக் காலத்தில் உண்டியல் முறையான பணமாற்றம் தடைசெய்யப்பட்டிருந்தது. பாபா அசரீரியாக அதனை சொல்லியிருந்ததால் நான் அந்த இனந்தெரியாத நபரிடம் முதற் கேட்ட கேள்வி எவ்வளவு காசு தம்பியார் எனக்கு அனுப்பியதாகச் சொல்லுகிறீர்கள் எனறே யாகும். அதற்கு அவர் பதின்மூவாயிரம் எனப் பதில் அளித்ததால் தான் பணத்தை வாங்கினேன். ஏறக்குறைய மூன்று வாரங்களுக்குப் பிறகே தம்பியிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது தான் இப்படி பணம் அனுப்பியிருக்கிறேன் என்று.

இவ்வாறு பகதர்களின் இடர்களை சிக்கல்களை பகவான் போக்கியருளுகிறார். மேலும் பல விடயங்கள் அடுத்து வரவிருக்கும் கட்டுரைகளில் வரும்.

---

**தாயகச் செய்திகள்**

ஆத்மஜோதி சஞ்சிகைத் தாபகர் ஆத்மீகவள்ளல் முத்தையா அவர்கள் 43 வருடங்கள் வாழ்ந்து அரும்பெரும் சேவையாற்றிய நாவலப்பிட்டியில், அங்கே சமயப் பணியாற்றி வரும் நாவலப்பிட்டி இந்து மன்றம் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் சைவ சமய எழுச்சி விழாவை 23-10-2011 ஞாயிற்றுக்கிழமை நடத்தியது. முழுநாள் விழாவாக நடைபெற்ற நிகழ்ச்சியில் காலை நிகழ்ச்சி ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் அரங்கில் நடைபெற்றது.


---


அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களைத் துணையாகக் கொண்டு ஒழுகு.

அருள் உண்டானால் தவம் என்ற தனிப்பெரும் பொருள் சித்திக்கும்.

உ
சிவமயம்







இந்து சமயப் பேரவைப் பொதுச் செயலாளர்

## திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம் அவர்களது

*அறுபதாவது பிறந்தநாள் விழாவிற்*

**பாடி வழங்கிய**



# *வாழ்த்துப் பா*



திருமுறைச் செல்வர் முத்துலிங்கம்
 சிவனடி போற்றும் பத்திலிங்கம்
அருளிதழ் ஆத்ம ஜோதிபுகழ்
 அண்ணல் முத்தையர் அருஞ்சீடர்
கரவரு டத்திற் பிறந்தமகன்
 காலச் சுழற்சியில் அதுமீண்டும்
வருவதைக் காணும் வரம்பெற்றார்
 வளமுடன் தொடர்ந்து வாழியவே!

இந்து சமயப் பேரவையை
 இடர்களைத் தாண்டித் துணிவுடனே
முந்தி வளர்த்துத் தாபகராம்
 முத்தையர் வழியில் நடத்துவதிற்
சிந்தை செலுத்தி உழைத்துவரும்
 சிவமுத்து லிங்கம் சிவனருளால்
பந்தமில் பணிகள் தொடர்ந்துசெய்து
 பவளமும் முத்தும் காணுகவே!

இந்த நாடு மட்டுமன்றி
 இலங்கை மற்றும் யாத்திரைசெய்
இந்தி யாவும் நன்கறிந்தே
 ஏற்றிப் போற்றும் வகையினிலே
இந்து சமயப் பேரவையின்
 இணையிற் பணிகள் தலைமைசொல்லிச்
சிந்தை குளிரச் செய்வாயே
 சிறப்புற வென்றும் வாழியவே!

ஆத்ம ஜோதி இல்லத்தில்
 ஆன்மிகம் வளர்க்கக் கூடுகின்ற
மூத்த வர்க்கு வழிகாட்டி
 முற்றோதல் நடத்தும் முத்துலிங்க
பூத்து நிற்கும் அறுபதிலே
 புண்ணியப் பலன்கள் பொலிவுறவே
ஆர்த்துப் பேரவைத் திருக்கூட்ட
 அடியார் மகிழ்ந்து வாழ்த்தினரே!

**வழங்குபவர்**
**இந்து சமயப் பேரவைத் திருக்கூட்டத்தினர்**
**22-11-2011**

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம்

கால்கள் இரண்டும் உடம்பு முழுவதையும் தாங்குவதுபோல ஆத்மீக வாழ்வுக்கு கால்களாய் உள்ளவை நம்பிக்கையும் முயற்சியுமாகும்.

நாம் யாவரும் தினமும் அறிந்தோ அறியாமலோ பல தவறுகளைச் செய்து கொண்டே இருக்கின்றோம். இறைவனுடைய திருவடிதான் எமக்குத் தஞ்சம் என்று எம்மை இறைவனிடம் ஒப்புக்கொடுக்கும்பொழுது இறைவனும் எமது பிழை எல்லாவற்றையும் மன்னித்து விடுகின்றான்.

மக்கள் பிறப்பின் பயன் இறைவனின் திருவடியை அடைதல் ஆகும்.

மனித உறுப்புக்களில் கண்ணைவிட சிறந்த உறுப்பு இல்லை. ஆனால் கண்வழியேதான் தீய எண்ணங்கள் எல்லாம் உருவாகின்றன.

உலகின் தீமைகள் எல்லாம் பார்த்துப் பார்த்து அழுக்கேறிய கண் இறைவன் திருவடி மலரைப்பார்க்கிற பொழுது படிந்திருந்த அழுக்கு குறைகின்றது.

கண்களிலுள்ள பாவ அழுக்கை இறைவனுடைய திருவடி மலர் நீக்குகின்றது.

நாம் விருப்பு வெறுப்பில்லாமல் இறைவனை வணங்கினால் தான் அவனின் பூரண அருளை அனுபவிக்க முடியும்.

இறைவனின் திருவடிகள் அடியார்களின் ஐம்புலன்களுக்கும் இன்பம் அளிப்பன.

திருவடிகள் சிந்திக்க முடியாத பெருமையுடையவை. சிந்தித்து வணங்குபவருக்கு இனபத் தேன் தருபவை.

விருப்பு வெறுப்பில்லாதவனாகிய பகவானினுடைய பாதத்தைக் கதியென்று சேர்கின்றவர்களுக்கு எந்தக் காலத்திலும் துன்பம் இல்லை.

சகல ஆத்மாக்களுக்கும் காவலாயுள்ளது இறைவனின் திருவடியேயாகும். இறைவனின் திருவடியை அடைந்த ஆத்மாக்களே ஆனந்த மயமாக முடியும். இதுவே பேரின்பம் இதுவே மோட்சம்.

அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நால்வகைப் புருசோத்தங்களுக்கு மேலாக திருவடிப்பேறு, திருவடி ஞானம் கூறப்படுவது சிந்தித்து உணர்தற்குரிய ஒன்றாகும்.

குரு வேறு இறைவன் வேறு அல்ல. இறைவன் திருவருளே குருமூர்த்தமாக வந்து, மானிடர்களை ஆட்கொள்வது வழக்கம்.

ஆத்மீக ஞானம் உள்ள குருவிடம் தஞ்சம் புகுந்துவிட்டால் குருவின் பாதமே பிறவிக்கடலைத் தாண்டும் தோணியாகும்.

குருவின் திருப்பார்வை பட்டதும் அஞ்ஞானம் அழிந்து ஒழிந்து விடுகின்றது.

மகான்களின் நயனதீட்சையினால் அஞ்ஞானம் அழியத் திருவடிஞானம் கிட்டுகின்றது.

இறைவனின் திருவடியைத் தியானம் செய்பவர்களை அத்திருவடி ஞானமயமாக்கும்.


உடல், உறவினர் மற்றும் வாழ்வு அனைத்தும் அநித்தியம் எனறும் சிவபெருமானின் திருவடியே நித்தியம் என்றும் நம்பியிருக்க வேண்டும்.

சூரியனைக் கண்ட உடனே இருள் விலகுவதுபோல இறைவனின் பாதத் தாமரையைக் கண்டதும் பக்தனின் ஆணவ இருளும் பேராசையும் அகன்றுவிடும்.

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க

அன்பானவர்களே,
உங்கள் வாழ்வின் அதியுயர் முதலீட்டை செவ்வனே செய்திட, உங்கள் சுமையை என் சுமையாகக் கருதி அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செயற்படும் என்னை இன்றே அழையுங்கள்

***Guidance provided in related services include:***
***Mortgage, Inspection, Legal, Insurance.***



**Ratheesh Subramaniam**, B.Sc (Hons)
Sales Representative

Direct: **416.303.4005**
Bus: **416.321.6969**
Fax: **416.321.6963**
Email: ratheesh_maniam@hotmail.com

**Homelife/GTA Realty Inc., Brokerage,**
**1711 McCowan Road, # 206, Toronto, ON. M1S 3Y3**
"Independently Owned and Operated"
*Higher Standards Agents...Higher Results!...*

# APPLEMORE
# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

## Ontario Emission Inspection




ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe.

ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**
**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION
MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA
*Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**
**TEL: 416-807-7468**
**416-410-6401**